ria
Money Transfer
உலகின் எப்பாகத்திற்கும் பணத்தை அனுப்ப உடன் நாடுங்கள்
Send and receive money worldwide

e-பத்திரிகை
uthayam news
உதயம் செய்திகள்
தமிழர்களின் புது யுகம்
உதயம் 04 | ஒளி 02 | 12 செப்டெம்பர் 2024 | www.uthayamnews.com

# பொது வேட்பாளர் தொடர்பில் தமிழரசுக்கட்சி - தமிழர் விடுதலைக் கூட்டணி திடீர் சந்திப்பு




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் இடையிலான சந்திப்பொன்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தலைமையில் சில தமிழரசுக் கட்சி முக்கியஸ்தர்களும் அருண் தம்பிமுத்து தலைமையிலான தமிழர் விடுதலைக்கூட்டணி முக்கியஸ்தர்களும் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

மூத்த போராளி யோகன் பாதரின் இல்லத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் மூத்த போராளி காக்கா அண்ணனும் கலந்து கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கான ஆதரவுத் தளத்தை விரிவுபடுத்துவதன் தேவையையும்

பக்கம் 02

# முதல் தெரிவு அரியம் இரண்டாவது தெரிவு அனுர

## தமிழர் தேசத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றம்

பக்கம் 02

# முதல் தெரிவு அரியம் இரண்டாவது தெரிவு அனுர

## தமிழர் தேசத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றம்





இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் நிலையில், யார் அடுத்த ஜனாதிபதி என்ற கேள்வி தொடர்ந்தும் நிலவிவரும் அதேவேளை,மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எதிர்பார்ப்பும் அவாவும் இலங்கை மக்களிடம் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

குறிப்பாக கடந்த 75 வருடங்களாக ஒரே பாசறையில் உருவான தலைவர்களே இந்த நாட்டில் ஆட்சியதிகாரத்தை அலங்கரித்து வந்த அதேவேளை,நாடு ஒரு வங்குரோத்து அடைந்த நாடாக உருவெடுப்பதற்கும் இன-மத முறுகல் மற்றும் ஒரு இனம் இன்னொரு இனத்தின் மீது அச்சம் கொண்டு பகைமையை வளர்த்ததற்கும் இந்த 75 வருடங்களாக நாட்டை ஆட்சி செய்த அரசுகளும் தலைவர்களுமே காரணம் என்பதை இன்றைய தலைமுறை சிந்திக்க ஆரம்பித்திருக்கும் ஒரு சூழலில் நாட்டில் ஒரு மாற்று சக்தியை உருவாக்குவதற்கு அணி திரள்வதையும் அதற்கான முயற்சிகளில் இறங்கியிருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

அந்த அடிப்படையில் தமிழர் தேசமும் போருக்கு பின்னரான கடந்த 15 வருடங்களுக்கு பின்னர் ஒரு தெளிவான எண்ணவோட்டத்தில் பயணிக்க ஆரம்பித்திருக்கிறது.அந்த அடிப்படையில் தமிழர் தேசமான வடக்கு-கிழக்கில் இம்முறை பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டிருக்கும் அதேவேளை,அவருடைய வெற்றிக்காக ஒரு சில கட்சிகளை தவிர ஏனைய அனைத்து கட்சிகளும் அதேபோல்,சிவில் சமூகத்தினர்,பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் மாற்றத்துக்காக ஏங்கும் மக்கள் உழைக்க ஆரம்பித்திருக்கும் அதேவேளை,ஒட்டுமொத்த நாட்டிலும் ஒரு மாற்றம் ஏற்படவேண்டுமென்ற நோக்கத்தில் பயணிப்பதை அவதானிக்க முடிகிறது.

அந்த அடிப்படையில் தமிழ் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் பிரசார நடவடிக்கைகளின் போது குறிப்பாக தமிழர்கள் அதுவும் இளம் சமூகம் முன்னெடுக்கும் பிரசாரங்களின்போது முதல் தெரிவு பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கும் இரண்டாவது புள்ளடி அனுர குமாரவுக்கும் வழங்குவது தொடர்பில் சிலாகிக்கப்பட்டு வருவதாக அறியக்கிடைக்கிறது.

இம்முறை தேர்தலில் தமிழர் தாயகத்திலும் ஒரு மாற்றம் ஏற்படவேண்டுமென்றும் ஒட்டுமொத்த நாட்டிலும் ஒரு மாற்றம் வரவேண்டுமென இந்த இளம் சமூகம் எதிர்பார்க்கிறது.அந்த அடிப்படையில் முதல் புள்ளடி அரியத்துக்கும் இரண்டாவது விருப்பு புள்ளடி அனுரவுக்கும் வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை இந்த இளம் சமூகம் முன்வைத்துவருவதுடன்,பலரது விருப்பும் இதுவாகத்தான் இருப்பதாக தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

ஆகவே பழமைவாத அரசியல் பாசறையில் வளர்ந்தவர்களை விலக்கிவைத்துவிட்டு புதிய ஒரு தெரிவுக்கு இளம் சமூகம் முன்வந்திருப்பது நாட்டுக்கு எவ்வாறான எதிர்காலத்தை உருவாக்கப்போகிறது என்பதையும் அந்த தெரிவு வெற்றியளிக்குமா? என்பதையும் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு பின்னர் பார்க்கமுடியும்.

## பொது வேட்பாளர் தொடர்பில் தமிழரசுக்கட்சி - தமிழர் விடுதலைக் கூட்டணி......

சங்கு சின்னத்திற்கு வாக்களிக்கும் தேவையையும் வலியுறுத்தியதுடன், தனது கருத்துக்களைத் தெரிவித்து ஆலோசனைகளையும் வழங்கியிருந்தார்.



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீநேசன், கோடீஸ்வரன் ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பாக கலந்துரையாடலில் கலந்து கொண்ட அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் உறுதியான கருத்துக்களைத் தெரிவித்ததால் கலந்துரையாடல் ஆக்கபூர்வமாக இருந்ததாக தெரித்தனர்.

இது போன்ற கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று தமிழ்ப் பொதுவேட்பாளருக்கான ஆதரவை அதிகரிக்கவும் இணக்கம் காணப்பட்டதாக கலந்துரையாடல் ஏற்பாட்டாளர் தெரிவித்தார்.



# அரியநேத்திரனின் பிரச்சாரத்தில் இடையூறு விளைவித்த பொலிஸார்

ஜனாதிபதி தேர்தலில் இம்முறை போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரன் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பில் 'நமக்காக நாம்' எனும் தொனிப் பொருளில் நேற்று செவ்வாய்க் கிழமை தேர்தல் பிரச்சாரத்தை அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுத்திருந்தார்.

இப் பிரச்சாரத்தின்போது பல்வேறு பகுதிகளில் பொலிஸார் அவருடன் முரண்பட்டதனை அவதானிக்க முடிந்தது. தனது பிரச்சாரத்தை பெரியநீலாவனை முருகன் கோயில் முன்றலில் இருந்து பூஜையுடன் ஆரம்பித்தார்.

பின்னர் மற்றுமொரு பிரச்சார நடவடிக்கைக்காக செல்வதற்கு தயாராகி கொண்டிருக்கும்போது அங்கு வருகை தந்த பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் விசேட அதிரடிப்படையினரின் இடையூறினால் முரண்பாடுகள் ஏற்பட்டன.

பின்னர் கல்முனை ஆர்.கே.எம் சந்தி கல்முனை தரவை பிள்ளையார் முன்றல் உள்ளிட்ட காரைதீவு கண்ணகி அம்மன் கோயில் பகுதியிலும் தேர்தல் பிரச்சாரத்தின்போது இவ்வாறு அழுத்தங்கள் தொடர்ந்ததுடன் பாதுகாப்பு தரப்பினரால் தீவிரமான கண்காணிப்பிற்கும் உள்ளானார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் பொது வேட்பாளர்: வடக்கு, கிழக்கு மக்கள் நினைப்பது என்ன?

2024ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி தேர்தல் குறித்து மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றி வடக்கு, கிழக்கில் கருத்துக்கணிப்பொன்று நடத்தப்பட்டது.

இதில் தமிழ் பொதுவேட்பாளரை இத் தேர்தலில் களமிறக்கியது தொடர்பிலும் அவர்கள் தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

ஈழத் தமிழர்களை தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஏமாற்றி வருவதாக இங்குள்ள மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

பொது வேட்பாளர் திடீரென்று தேர்தலில் களமிறங்கவில்லை. சுமார் ஆறு மாதங்களுக்கும் மேலாக தமிழ்க் கட்சிகள், பொது அமைப்புக்களும் இணைந்து பொது வேட்பாளரை களமிறக்கலாமா? அதற்கான சாதக பாதகங்கள் ஆகியவை பற்றிய நீண்ட விவாதத்துக்குப் பின்னரே பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளார். எங்களுக்கு விருப்பமோ இல்லையோ ஏதோ ஒரு நிர்பந்தத்தின் பெயரில் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வாக்களித்தோம். நாம் தமிழர்களுக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என இங்கு வாழும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ் இனத்தின் பிரச்சினை தீர்ப்பதற்காக எந்தவொரு ஜனாதிபதியும் இதுவரையில் முயற்சி எடுக்கவில்லை. இந்தத் தேர்தலிலிருந்து தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது. அவர்கள் நினைத்ததை சாதிப்பார்கள். என வாக்காளர் ஒருவர் கூறினார்.

பல வருடங்களாக நாம் எமது உரிமைகளுக்காக போராடி வருகின்றோம். ஒருவரும் அதற்காக முன்வரவில்லை. எனவே எங்கள் பிரச்சினைகளுக்காக நாங்கள்தான் போராட வேண்டும்.

தமிழ் மக்கள் எதற்கும் சளைத்தவர்கள் இல்லை. நாம் ஒற்றுமையாக இருந்து எமது வாக்குரிமையைப் பயன்படுத்தி உரிமைக்காக போராட வேண்டும் என மற்றுமொரு வாக்காளர் தமது கருத்தை பகிர்ந்துக் கொண்டார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.




# பொதுவேட்பாளரை ஆதரிப்பதில் உறுதியா?: பிரித்தானியாவில் ஸ்ரீதரன் தெரிவித்தது என்ன?

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டின் அடிப்படையில் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதில் தான் உறுதியாக இருப்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தனது அரசியல் பயணத்தையும் அது சார்ந்த பணிகளையும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் நின்றுதான் மக்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

அதன் அடிப்படையிலேயே காலத்தின் தேவையுணர்ந்து தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் தான் உறுதியாக இருப்பதாக சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிரித்தானியா சென்றிருந்த சிறீதரன் அங்கு புலம்பெயர் தமிழர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இங்கு தொடர்ந்து பேசிய அவர்,

'ஈழத்தமிழர்களை மையப்படுத்திய தமிழ்த் தேசிய அரசியல் நீரோட்டத்தில் இனத்தின் இருப்புக்காகவும், இறைமைக்காகவும் அரசியல் பணியாற்றுவதற்காகவே நான் இணைந்துகொண்டேன்.

எனது அரசியல் பயணத்தையும், அது சார்ந்த பணிகளையும் அதே தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் நின்றுதான் எமது மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதனால் இறுதி வரை அந்தக் கொள்கையில் பிறழ்வற்றுப் பயணிக்கத் தலைப்பட்டுள்ளேன்' என்று தெரிவித்துள்ளார்.





# தமிழ் பொதுவேட்பாளரும் தமிழர் அரசியலின் எதிர்காலமும்

**டி.பி.எஸ். ஜெயராஜ்**

இம்மாதம் 24 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டது. ஒருவர் இறந்ததை அடுத்து இப்போது 38 பேர் களத்தில் நிற்கிறார்கள். அவர்களில் ஜனாதாபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாசவுமே பிரதான வேட்பாளர்கள்.

ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்க, ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச,பிரபல ஊடக நிறுவனங்களின் உரிமையாளரான திலித் ஜயவீர, பிலாட் மார்ஷல் சரத் பொன்சேகா, முன்னாள் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, மூத்த இடதுசாரி தலைவர் சிறிதுங்க ஜெயசூரிய, முன்னரங்க சோசலிஸ்ட் கட்சியின் செயற்பாட்டாளர் நுவான் போபகே மற்றும் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் ஆகியோர் ஏனைய குறிப்பிடத்தக்க வேட்பாளர்கள்.

முக்கியமான போட்டியாளர்களாக ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் பிரேமதாசவும் திசாநாயக்கவுமே இருக்கிறார்கள் என்பது வெளிப்படையானது. குறிப்பிடத்தக்க அளவுக்கு வாக்குகளைப் பெறக்கூடியவர்களாக நாமல் ராஜபக்சவையும் திலித் ஜயவீரவையும் எதிர்பார்க்கலாம்.

ஆனால், சில வேட்பாளர்கள் விசேட காரணங்களுக்காக தேர்தலில் போட்டியிடுகிறார்கள். வேறு சிலர் இரகசிய காரணங்களுக்காக 'போலி ' வேட்பாளர்களாக நிற்கிறார்கள். சிலர் விளம்பரம் தேடுபவர்கள். ஜனாதிபதி தேர்தலில் எந்த விதத்திலும் தங்களால் வெற்றிபெறமுடியாது என்பது பல வேட்பாளர்களுக்கு மிகவும் நன்றாகத் தெரியும். இருந்தாலும் பிரத்தியேகமான நோக்கங்களுக்காக அல்லது ஏதோ ஒரு செய்தியைக் கூறுவதற்காக போட்டியிடுகிறார்கள்.

> **' தமிழ் பொதுவேட்பாளர் 'என்ற விபரிப்பு செல்லுபடியற்றது என்றும் வாதிடப்படுகிறது.அரசியல் கட்சிகளையும் அமைப்புக்களையும் கொண்ட ஒரு குழு தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை பிரேரித்த போதிலும், அதை எதிர்க்கும் வேறு தமிழ் அரசியல் கட்சிகளும் குழுக்களும் இருக்கின்றன. சில தமிழ் கட்சிகள் குறிப்பிட்ட ஒரு 'சிங்கள 'வேட்பாளரை ஆதரிப்பதாக ஏற்கெனவே அறிவித்துவிட்டன. இத்தகைய சூழ்நிலைகளின் கீழ் சுயேச்சை தமிழ் வேட்பாளர் 'தமிழ் பொதுவேட்பாளர்' என்ற பெயருக்கு உரித்துடையவரல்ல என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள்.**

அத்தகையவர்களில் ஒருவரான அரியநேத்திரன் சங்கு சின்னத்தின் கீழ் ஒரு சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுகின்றார். 69 வயதான முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரான அவர் தமிழ் பொது ஜனாதிபதி வேட்பாளராக களத்தில் நிற்கிறார். சிவில் சமூக அமைப்புக்களையும் சில தமிழ் அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய குழு ஒன்று அவரை ஆதரிக்கிறது. அரியம் என்று பொதுவாக அழைக்கப்படும் அரியநேத்திரன் தமிழ் ஊடகங்களில் 'தமிழ் பொதுவேட்பாளர்' என்று வர்ணிக்கப்படுகிறார்.

## பெரிய சர்ச்சை

தற்போதைய ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டிருப்பது பெரியதொரு சர்ச்சையை தோற்றுவித்திருக்கிறது. இலங்கை தமிழர்கள் நாட்டின் சனத்தொகையில் 11.1 சதவீதத்தினர் மாத்திரமே. தமிழ் வேட்பாளர் தேர்தலில் வெற்றிபெறுவதற்கு வாய்ப்பு கிடையாது என்பது வெளிப்படையானது. அதனால் தமிழ் பொது வேட்பாளர் திட்டம் கேலிக்குரியது என்றும் அநாவசியமானது என்றும் பல தமிழர்கள் அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார்கள். பொதுவேட்பாளர் திட்டத்தின் ஆதரவாளர்கள் தங்களது குறிக்கோள் தேர்தலில்



# தமிழ் பொதுவேட்பாளரும் தமிழர் அரசியலின் எதிர்காலமும்

வெற்றிபெறுவது அல்ல என்று கூறி அந்த அபிம்பிராயத்தை மறுதலிக்கிறார்கள். தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் தமிழ் பொதுவேட்பாளர் தீர்வு காணப்படாமல் இருக்கும் தமிழ் தேசியப்பிரச்சினையை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் கவனத்துக்கு கொண்டுவருவார் என்று இந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

தற்போதைய ஜனாதிபதி தேர்தலில் பிரதானமாக பொருளாதாரப் பிரச்சினைகள், ஊழல் மற்றும் முறைமை மாற்றம் மீதே கவனம் செலுத்தப்படுகிறது என்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இலங்கை தமிழர்கள் சம்பந்தப்பட்ட பிரத்தியேகமான பிரச்சினைகள் அலட்சியம் செய்யப்படுகின்றன, முக்கியத்துவமற்றவையாக நோக்கப்படுகின்றன அல்லது கவனிக்காமல் விடப்படுகின்றன என்றும் அவர்கள் கூறுகிறார்கள். அதனால் தமிழ் மக்களின் மனக்குறைகள் இன்னமும் தீர்த்து வைக்கப்படவில்லை என்பதையும் அபிலாசைகளுக்கு இடமளிக்கப்படவில்லை என்பதை சம்பந்தப்பட்ட சகலருக்கும் தமிழ் நினைவுபடுத்துவார் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

கடந்த காலத்தில் ஜனாதிபதி தேர்தல்களில் சிங்கள வேட்பாளர்களுக்கே தமிழர்கள் வாக்களித்து வந்திருக்கிறார்கள் என்றும் அளிக்கப்பட்ட பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது. அதனால் இந்த தடவை தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிப்பதன் மூலம் ஒரு செய்தியை கூறமுடியும் என்று வாதிடப்படுகிறது. தவிரவும், தமிழ் பொதுவேட்பாளர் ஒருவருக்கு வாக்குகளை திரட்டுவது தமிழர்கள் மத்தியில் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் பெருமளவுக்கு மேம்படுத்த உதவும் என்பதுடன் தமிழர்கள் மேலும பிளவுபட்டுப்போவதை தடுக்கும் என்று கூறப்படுகிறது.

இதை ஒரு வகையான சர்வஜன வாக்கெடுப்பாக காண்பிக்கமுடியும் என்பது தமிழ் வேட்பாளர் திட்டத்தின் ஆதரவாளர்களில் சிலர் வலியுறுத்துகின்ற இன்னொரு கருத்து. தமிழ் பொது வேட்பாளருக்கு அளிக்கப்படும் வாக்குகளை சமஷ்டி அடிப்படையிலான இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணம் ஒன்றுக்கான தமிழ் தேசிய அபிலாசைக்கு ஆதரவானவை என்று வியாக்கியானப்படுத்த முடியும் என்பது ஒரு மிதவாதப் போக்கிலான கருத்தாக இருக்கிறது. அதேவேளை, அவருக்கு கிடைக்கின்ற வாக்குகள் சுயநிர்ணயம், தேசியம், தாயகம் என்ற மூன்று கோட்பாடுகளையும் மீள வலியுறுத்தும் எனபது தீவிரவாத போக்கிலான கருத்தாக இருக்கிறது.

தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவாக இல்லாதவர்கள் இந்த வாதங்களை மறுதலிக்கிறார்கள். வெற்றிபெறும் வாய்ப்பை அறவே கொண்டிராத ஒரு தமிழ் வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களிப்பதை விடவும் வெற்றிபெறும் வாய்ப்பைக் கொண்ட பிரதான ‘சிங்கள’ வேட்பாளர்களில் ஒருவருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கக்கூடியது சாத்தியம் என்று அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அதனால் தமிழ் பொதுவேட்பாளர் திட்டம் பயனற்ற ஒரு செயற்பாடு என்று அவர்கள் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் 1952 ஆம் ஆண்டில் இருந்தே பாராளுமன்ற தேர்தல்களில் சமஷ்டிக் கோட்பாடுகளின் அடிப்படையிலான அதிகாரப்பகிர்வு ஏற்பாடு ஒன்றுக்கு ஆதரவாகவே தொடர்ச்சியாக வாக்களித்து வந்திருக்கிறார்கள் என்றும் அதனால் மீண்டும் அதை நிரூபிப்பதற்கு 2024 ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்தவேண்டியது தேவையில்லை என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

தற்போதைய ஜனாதிபதி தேர்தல் கடந்தகாலத் தேர்தல்களில் இருந்து வேறுபட்டது என்றும் தமிழ் பொது வேட்பாளர் திட்டத்தை விமர்சிப்பவர்கள் கூறுகிறார்கள். மூன்று பிரதான வேட்பாளர்களும் பெருமளவு அதிகாரப் பகிர்வுக்கு அல்லது மேம்பட்ட அதிகாரப் பரவலாக்கத்துக்கு இணக்கத்தை தெரிவிக்கக்கூடிய தன்மையைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கு பதிலாக அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியிடப்படும் வரை காத்திருந்து அவர்களுடன் அர்த்தபுஷ்டியான பேச்சு வார்த்தைகளை நடத்துவது குறித்து சிந்தித்திருந்தால் அது நல்லதாக இருந்திருக்கும்.

மேலும், தமிழ் பொதுவேட்பாளர் தனது அரசியல் கோரிக்கைகளை நியாயப்படுத்தி வலுவூட்டுவதற்கு



# தமிழ் பொதுவேட்பாளரும் தமிழர் அரசியலின் எதிர்காலமும்

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள வாக்குகளில் குறைந்தபட்சம் ஐம்பது சதவீதமானவற்றை பெறவேண்டும் என்றும் விமர்சகர்கள் கூறுகிறார்கள். தற்போதைய பின்புலத்தில் அது சாத்தியமாகும் என்று தோன்றவில்லை. அத்துடன் கிழக்கில் தமிழர்கள் தனியான பெரிய சமூகமாக மாத்திரமே இருக்கிறார்கள். முஸ்லிம்களையும் சிங்களவர்களையும் சேர்த்தால் தமிழர்கள் சிறுபான்மையினரே. அதனால் வாக்களிப்பு முடிவுகள் கிழக்கு மாகாணத்தில் ஒரு சிறுபானமையினர் என்பதை வெளிக்காட்டி வடக்கு -- கிழக்கு இணைப்புக்கான நியாயத்தை மலினப்படுத்திவிடக் கூடும்.

‘ தமிழ் பொதுவேட்பாளர் ’என்ற விபரிப்பு செல்லுபடியற்றது என்றும் வாதிடப்படுகிறது.அரசியல் கட்சிகளையும் அமைப்புக்களையும் கொண்ட ஒரு குழு தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை பிரேரித்த போதிலும், அதை எதிர்க்கும் வேறு தமிழ் அரசியல் கட்சிகளும் குழுக்களும் இருக்கின்றன. சில தமிழ் கட்சிகள் குறிப்பிட்ட ஒரு ‘சிங்கள ’வேட்பாளரை ஆதரிப்பதாக ஏற்கெனவே அறிவித்துவிட்டன. இத்தகைய சூழ்நிலைகளின் கீழ் சுயேச்சை தமிழ் வேட்பாளர் ‘தமிழ் பொது வேட்பாளர்’ என்ற பெயருக்கு உரித்துடையவரல்ல என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

## பின்னணியும் வரலாறும்

தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவாகவும் எதிராகவும் வாதங்கள் முன்வைக்கப்படுகின்ற இன்றைய பின்புலத்தில் இந்த கட்டுரை அந்த விடயத்தில் கவனத்தைச் செலுத்துகிறது இந்த தமிழ் வேட்பாளர் திட்டத்தின் விளைவுகளை முழுமையாக விளங்கிக் கொள்வதற்கு அதன் வரலாற்றையும் பின்புலத்தையும் ஓரளவுக்கு சுருக்கமாக ஆராய்வது அவசியமானதாகும்.

2009 மே மாதம் தமிழீழ விடுதலை புலிகளின் இராணுவத் தோல்வி தெற்காசியாவின் மிகவும் நீண்ட போரை முடிவுக்கு கொண்டு வந்தது. அது தமிழ் தேர்தல் அரசியலில் புதிய கட்டம் ஒன்றை திறந்துவிட்டது.2010 ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டபோது எதிர்க்கட்சிகள் அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக பொது எதிரணி வேட்பாளராக முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை களமிறக்கின.

அந்த நேரத்தில் இலங்கையின் வடக்கையும் கிழக்கையும் சேர்ந்த தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான அரசியல் அணியாக தமிழ் தேசிய கூட்டமைப்பு விளங்கியது. அதில் இலங்கை தமிழரசு கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ ), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை இயக்கம் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அங்கம் வகித்தன. தமிழ் தேசிய கூட்டயைப்பும் பொன்சேகாவை ஆதரித்தது.

## சிவாஜிலிங்கம்

பொன்சேகாவை கூட்டமைப்பு ஆதரித்ததை ரெலோவின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கடுமையாக எதிர்த்தார். போரின் இறுதிக்கட்டத்தில் தமழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு ராஜபக்சவும் பொன்சேகாவும் பொறுப்பு என்பதால் இருவரையுமே எதிர்க்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தார்.

பொன்சேகாவை ஆதரிப்பதற்கு பதிலாக தமிழ்க்கட்சிகள் தனியான வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்று சிவாஜிலிங்கம் யோசனையை முன்வைத்தார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் உயர்மட்டம் சிவாஜியின் யோசனையை நிராகரித்தது. அதனால் தான்தோன்றித்தனமாக நடந்துகொள்ளும் சுபாவத்தைக் கொண்ட அவர் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி 2010 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். தன்னை தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் என்று காட்சிப்படுத்திய அவர் ஒரு சிங்கள வேட்பாளருக்கு பதிலாக தனக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுத்தார். இதுவே பொதுத்தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் என்ற கோட்பாட்டின் தொடக்கமாகும். சிவாஜிலிங்கம் 9662 வாக்குகளை மாத்திரம் பெற்ற பரிதாபத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

2019 ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ச போட்டியிட்டார். பாதுகாப்பு செயலாளராக இருந்தபோது கோட்டாபய செய்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மீது கவனத்தை ஈர்ப்பதற்காக தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை களமிறக்க வேண்டும் என்று சிவாஜிலிங்கம் மீண்டும் யோசனையை முன்வைத்தார். அந்த பொதுவேட்பாளர் திட்டத்துக்கு



# தமிழ் பொதுவேட்பாளரும் தமிழர் அரசியலின் எதிர்காலமும்

தமிழ் அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கு அவர் முயற்சித்தார். ஆனால் அதை எவரும் கவனத்தில் எடுக்கவில்லை. சளைக்காத சிவாஜிலிங்கம் மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதி தேர்தல் களத்தில் குதித்தார். சுயேச்சை வேட்பாளராக போட்டியிட்ட அவர் தமிழ் கட்சிகளினதும் தமிழ் மக்களினதும் ஆதரவை நாடினார். மீண்டும் படுதோல்வி கண்ட அவருக்கு 12, 256 வாக்குகள் மாத்திரமே கிடைத்தன.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் திட்டத்தினால் இலங்கை தமிழ் மக்கள் கவரப்படவில்லை என்பதை சிவாஜிலிங்கத்தின் இ'ரட்டைத் தோல்வி வெளிக்காட்டியது. அதனால் அந்த கோட்பாடு வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் போடப்படும் என்றே தோன்றியது. ஆனால் ஒரு மூத்த அரசியல் தலைவரின் முயற்சியின் விளைவாக புத்துயிர் பெற்றது.

## சுரேஷ் பிரேமச்சந்திரன்

சுரேஷ் பிரேமச்சந்திரன்/ சுரேஷ் என்று அறியப்படும் கந்தையா பிரேமச்சந்திரன் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர் எல்.எவ்.) செயலாளர் நாயகம் / தலைவர். அவர் முதலில் 1989 தொடக்கம் 19994 வரையும் பிறகு 2001 தொடக்கம் 2005 வரையும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். பாராளுமன்றத்துக்கு தெரிவாவதற்கு தேவையான விருப்பு வாக்குகளைப் பெறத்தவறியதால் சுரேஷ் கடந்த ஒன்பது வருடங்களாக பாராளுமன்றத்துக்கு செல்லமுடியவில்லை. 2001 ஆம் ஆண்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தாபக கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ். 2016 ஆம் ஆண்டில் அதிலிருந்து வெளியேறியது.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் திட்டத்தை மீண்டும் ஒரு பெரியளவில் முன்னெடுத்தவர் சுரேஷ் பிரேமச்சந்திரனே. 2023 ஆம் ஆண்டின் பிறபகுதியில் இருந்தே அவர் அதைச் செய்யத் தொடங்கினார். சுரேஷ் பெரும் முயற்சி எடுத்தபோதிலும், செல்வாக்குமிக்க ஊடக உரிமையாளர் ஒருவர் சம்பந்தப்படும்வரை அந்த கோட்பாட்டுக்கு குறிப்பிடத்தக்க ஆதரவு கிடைக்கவில்லை. எஸ்.எஸ். குகநாதன் அல்லது குகன் என்று அறியப்படும் சபாபதி சுப்பையா குகநாதன் யாழ்நகரை தளமாகக் கொண்ட டான் ரி.வி. மற்றும் ஈழநாடு பத்திரிகையை நடத்தும் ஏ.எஸ். கே. குழுமத்தின் உரிமையாளராவார்.

பல தசாப்தகாலா அனுபவத்தைக் கொண்ட ஒரு நீண்டகால பத்திரிகையாளரான குகநாதன் இந்த வருட ஆரம்பத்தில் இருந்து தமிழ் பொது வேட்பாளர் திட்டத்தை ஆதரிக்கத் தொடங்கினார். தமிழ் வேட்பாளர் கோட்பாட்டை மேம்படுத்தும் செய்திகளும் ஆசிரிய தலையங்கங்களும் கிரமமாகவும் திட்டமிட்ட முறையிலும் அவரது பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டன. இந்த கோட்பாட்டுக்கு ஆதரவாக தொலைக்காட்சியில் பல நேர்காணர்களும் விவாதங்களும் ஒளிபரப்பாகின. மேலும் குகநாதன் அந்த திட்டத்துக்கு ஆதரவாக மக்களை அணிதிரட்டுவதற்காக பல்வேறு தமிழ் நகரங்களில் பல பொதுக் கூட்டங்களுக்கும் கலந்துரையாடல்களுக்கும் நிதியுதவியையும் செய்தார்.

நாளடைவில் பல்வேறு தமிழ்ப் பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதும் பல அரசியல் ஆய்வாளர்களும் தங்களது எழுத்துக்கள் மூலமும் தொலைக்காட்சி நேர்காணல்கள் மூலமும் தமிழ் பொதுவேட்பாளர் திட்டத்தை ஊக்குவிக்கத் தொடங்கினர். புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த சிலர் இந்த திட்டத்தை ஆதரிப்பதாகவும் அதற்காக பணத்தை வழங்குவதாகவும் வதந்திகளும் கிளம்பின. அதற்கு பிறகு யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் தொடர்ச்சியாகாபல கருத்தரங்குகளும் கலந்தாலோசனைகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. அவற்றில் பல சிவில் சமூக அமைப்புக்கள் பங்குபற்றின.

## தமிழ் அரசியல் கட்சிகள்

இன்னொரு மட்டத்தில் தமிழ் அரசியல் கட்சிகளும் ஈடுபாடு காட்டத் தொடங்கின. முன்னர் கூறப்பட்டதைப் போன்று தமிழ் பொதுவேட்பாளர் திட்டத் தை மேம்படுத்துவதில் முன்னோடியாகச் செயற்பட்ட அரசியல் கட்சி ஈ.பி.ஆர்.எல்.எவ். தான். பிறகு ஏனைய கட்சிகளும் ஆர்வம் காட்டின. தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் நிலவிய உள்நெருக்கடி ரெலோவும் தமிழீழ மக்கள் விடுதலை கழகமும் (புளொட்) தனிவழி செல்வதற்கு வழிவகுத்தது. ஈ.பி.ஆர்.எல்.எவ்வுடன் சேர்ந்து இவ்விரு கட்சிகளும் வேறு இரு கட்சிகளும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை அமைத்தன. தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் தமிழரசு கட்சி தனிமைப்படுத்தப்பட்டது.

தமிழ் பொதுவேட்பாளர் திட்டத்துக்கு மேலும் தமிழ் கட்சிகளின் ஆதரவு கிடைத்தது. மொத்தமாக ஏழு அரசியல் கட்சிகள் அந்த திட்டத்தை ஆதரித்தன. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமீழீழ மக்கள் விடுதலை கழகம், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ் தேசிய கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி மற்றும் தமிழ் தேசிய பசுமை இயக்கம் ஆகியவையே அந்த கட்சிகளாகும்.

மறுபுறத்தில் தமிழ் பொதுவேட்பாளர் திட்டத்தை ஒருங்கிணைந்து நடைமுறைப்படுத்துவதற்கு 81 தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள், வர்த்தகர் சங்கங்கள் மற்றும் தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. இது 'தமிழ் தேசிய பொதுச் சபை' என்று அழைக்கப்பட்டது. செயற்பாடுகளை மேற்பார்வை



# தமிழ் பொதுவேட்பாளரும் தமிழர் அரசியலின் எதிர்காலமும்

செய்வதற்கு இந்த பொதுச்சபை நிறைவேற்றுக்குழு ஒன்றையும் ஆலோசனைக்குழு ஒன்றையும் அமைத்தது.

## பொதுக் கட்டமைப்பு

அதற்கு பிறகு தமிழ் மக்கள் பொதுச்சபையும் முன்னர் குறிப்பிடப்பட்ட ஏழு அரசியல் கட்சிகளும் தமிழ் பொதுவேட்பாளர் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு செயல்முறை ஏற்பாட்டுக்கு வந்தன. தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட்டது. அந்த கட்டமைப்புக்கு 14 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு உயர்பீடம் இருக்கிறது. அதில் ஏழு பேர் சிவில் சமூகப் பிரதிநிதிகளாகவும் ஏழு பேரா அரசியல் கட்சிகளின் தலைவர்களாகவும் இருந்தனர்.

என்.ஸ்ரீகாந்தா, டி. சித்தார்த்தன், எஸ். பிரேமச்சந்திரன், எஸ். அடைக்கலநாதன், சி.வி. விக்னேஸ்வரன், ரி.வேந்தன் மற்றும் பி.ஐங்கரநேசன் ஆகியோரே அந்த அரசியல் தலைவர்களாவர். கே.ரி. கணேசலிங்கம், செல்வின் மரியாம்பிள்ளை, சி. யோதிலிங்கம், ஏ. யதீந்திரா, கே. நிலாந்தன், ரி. வசந்தராஜா மற்றும் ஆர். விக்னேஸ்வரன் ஆகியோரே சிவில் சமூகப் பிரதிநிதிகளாவர். உயர்பீடத்தின் பதினான்கு உறுப்பினர்களில் பத்துப்பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். ஏனைய நான்கு பேரும் வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

## அரியநேத்திரன் என்ற அரியம்

அதற்கு பிறகு பொதுவேட்பாளர் ஒருவரை தெரிவுசெய்யும் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில் ஒரு நூறு பேரின் பெயர்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டதாக தகவறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவந்தது. இது பிறகு 46 பெயர்களைக் கொண்ட ஒரு நீண்ட பட்டியலாக மாறியது. அதற்கு பிறகு இது ஏழு பெயர்களைக் கொண்ட குறுகிய பட்டியலாக சுருங்கியது. இறுதியில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான தமிழ் பொது வேட்பாளராக அரியம் என்ற பாக்கியசெல்வம் அரியநேத்திரன் தெரிவு செய்யப்பட்டார்.

பொதுவேட்பாளராக களமிறங்குவதற்கு முன்வருமாறு அணுகப்பட்டவர்களில் பலர் அதற்கு மறுத்த காரணத்தினால் தெரிவுச் செயன்முறை பெரும் சிக்கலானதாக இருந்ததாக தமிழ் சிவில் வட்டாரங்கள் மூலம் அறியவந்தது. வேறு சந்தர்ப்பங்களில் சிலரை பொதுவேட்பாளராக பரிசீலிப்பதற்கு சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் இருந்து அல்லது அரசியல் கட்சிகளிடம் இருந்து ஆட்சேபனை வந்தது. தெரிவு செய்யப்படும் வேட்பாளர் அடுத்த இரு வருடங்களுக்கு எந்தவொரு தேர்தலிலும் போடடியிடக்கூடாது ; அவர் தான் போட்டியிடுகின்ற சின்னத்தை பிறகு பயன்படுத்தக்கூடாது என்ற நிபந்தனையும் பெரிய நெருக்குதலை ஏற்படுத்தியது. பெண் வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்வதற்கான முயற்சியும் வெற்றிபெறவில்லை. வேட்பாளராக தெரிவு செய்யப்படுவதற்கு அரியநேத்திரனுக்கு அனுகூலமாக மூன்று முக்கிய காரணிகள் அமைந்தன. முதலாவது அவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர். பெருமளவில் தமிழர்கள் மத்தியில் ஐக்கியத்தை ஊக்கப்படுவத்துவதற்கு வட மாகாணத்தைச் சேர்ந்த ஒரு வேட்பாளரை விடவும் கிழக்கு மாகாண வேட்பாளர் ஒருவரை களமிறக்கவேண்டியது முக்கியமானதாக இருந்தது. இரண்டாவது தேர்தல் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அரியநேத்திரன் உறுதியளித்திருக்கிறார். இனிமேல் எந்தொரு தேர்தலிலும் தான் வேட்பாளராக நிற்கப்போவதில்லை என்று அவர் கூறினார். மூன்றாவது அவர் ஒரு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்பதால் ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு தகுதியைக் கொண்டவராக இருந்தார். தமிழ் அரசியல் கட்சிகள் அவற்றின் சின்னத்தின் கீழ் வேட்பாளர் ஒருவரை நியமிப்பநற்கு தயங்கியதால் புதியதொரு சின்னத்தின் கீழ் சுயேச்சை வேட்பாளர் ஒருவர் தேவைப்பட்டார்.

தமிழ் பொதுவேட்பாளர் போட்டியிடுவது வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்களின் வாக்குகளைக் குறிவைக்கும் சிங்கள வேட்பாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது சாத்தியம். அவர்களுக்கு செல்லக்கூடிய வாக்குகள் இப்போது அரியநேத்திரனுக்கு போகலாம். ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாசவும் தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்புடன் தொடர்புகொண்டு பேச்சுவார்த்தைகளை நடத்தினர். புளொட்,ரெலோ மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர். ரெலோவும் புளொட்டும் பிரேமதாசவுடன் பேச்சுவார்த்தை நடத்தின. தமிழ் பொதுவேட்பாளரை களமிறக்கியதற்கான காரணங்கள் இருவருக்கும் விரிவாக கூறப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அம்பிளாந்துறையில் 1955 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி பிறந்த அரயநேத்திரன் கொக்கட்டிச்சோலையில் அமைந்திருக்கும் மிகவும் பிரபல்யமான 'தான்தோன்றீஸ்வரர்' சிவன் கோவிலின் மரபு வழியான அறங்காவலர்களாக




# தமிழ் பொதுவேட்பாளரும் தமிழர் அரசியலின் எதிர்காலமும்

இருந்துவரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். அரியம் என்று பிரபல்யமாக அறியப்படும் அவர் ஆற்றல்மிகு எழுத்தாளரும் தமிழ்ப் பேச்சாளருமாவார். பல வருடங்களுக்கு முன்னர் கிழக்கில் விடுதலை புலிகளானால் வெளியிடப்பட்ட 'தமிழ் அலை' பத்திரிகையின் ஆசிரியராகவும் அவர் பணியாற்றினார். தற்போது கொழும்பில் இருந்து வெளியாகும் 'தமிழன்' பத்திரிகையில் அரசியல் பத்தியொன்றை அரியம் எழுதிவருகிறார்.

அவர் 2004 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினராக பாராளுமன்றப் பிரவேசம் செய்தார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளராகப் போட்டியிட்ட அவர் 35,337 வாக்குகளைப் பெற்றார். மட்டக்களப்பு உறுப்பினராக 2010 பாராளுமன்ற தேர்தலிலும் தெரிவான அவருக்கு16,504 வாக்குகள் கிடைத்தன. 2015 பாராளுமன்ற தேர்தலில் தெரிவாவதற்கு அவருக்கு போதுமான விருப்பு வாக்குகள் கிடைக்கவில்லை 2020 பாராளுமன்ற தேர்தலில் அவர் போட்டியிடவில்லை. ஆனால் தொடர்ந்து அரசியலில் தீவிரமாக இயங்கிவரும்˙அரியம் இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழுவின் உறுப்பினராக இருந்துவருகிறார்.

## தமிழரசு கட்சியின் சர்ச்சை

தமிழ் பொதுவேட்பாளர் தற்போது தனது கட்சிக்குள் ஒரு சர்ச்சையில் சிக்கியிருக்கிறார். சி.வி.கே. சிவஞானம்,எம்.ஏ. சுமந்திரன், சாணக்கியன் இராசமாணிக்கம் போன்றவர்கள் பொதுவேட்பாளர் திட்டத்தை எதிர்க்கின்ற அதேவேளை மாவை சேனாதிராஜா, ஜ. சிறீநேசன், சிவஞானம் சிறீதரன் போன்றோர் அதற்கு ஆதரவாக இருக்கிறார்கள்.

தமிழரசு கட்சி எந்த வேட்பாளரை ஆதரிக்கவேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு பிரதான வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு கட்சியின் மத்திய செயற்குழு சுமந்திரனுக்கு அதிகாரமளித்தது. ரணில் விக்கிரமசிங்க,சஜித் பிரேமதாச, அநுரா குமார திசாநாயக்க போன்ற வேட்பாளர்களுடன் ஏன் நாமல் ராஜபக்சவுடனும் கூட அவர் பேச்சுவார்த்தைகளை நடத்திவந்தார். பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து அவர் கட்சிக்கு அறிவித்து வந்தார். பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆழமாக ஆராய்ந்து இறுதி முடிவு ஒன்று எடுக்கப்படும் என்று கூறப்பட்டது. இந்த ஜனாதிபதி தேர்தலில் 'வெற்றிபெறுபவருடன்' நிற்கவேணடும் என்று தமிழரசு கட்சி உறுதியாக இருந்தது.

கட்சி இறுதித் தீர்மானத்தை எடுத்திராத நிலையில் தமிழ் பொதுவேட்பாளராக போட்டியிடுவதற்கு அரியநேத்திரன் ஒருதலைப்பட்சமாக முடிவெடுத்தார். இது விடயத்தில் அவரை சிறீதரன் போன்றவர்கள் வெளிப்படையாக ஆதரித்தார்கள். இது தொடர்பாக அரியநேத்திரனிடம் இருந்து தமிழரசு கட்சி ஒரு விளக்கத்தைக் கோரியது. கட்சியின் கொள்கை வகுக்கும் மத்திய செயற்குழு உறுப்புரிமையில் இருந்து அவர் இடைநிறுத்தம் செய்யப்பட்டார். தமிழ் வேட்பாளர் தொடர்பான எந்த நடவடிக்கையிலும் உறுப்பினர்கள் ஈடுபடுக்கூடாது என்றும் கட்சி தடை பிறப்பித்தது. ஏற்கெனவே பிளவடைந்திருக்கும் தமிழரசு கட்சி இந்த விவகாரம் தொடர்பில் பாரிய பிளவை நோக்கிச் செல்கின்றது போன்று தெரிகிறது.

இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் மூத்த துணைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் கூடிய தமிழரசு கட்டியின் மத்திய செயற்குழு ஏகமனதாக மூன்று தீர்மானங்களை எடுத்ததாக சுமந்திரன் செய்தியாளர்கள் மகாநாட்டில் அறிவித்தார்.

தமிழ் பொதுவேட்பாளரை ஆதரிப்பதில்லை அரியநேத்திரன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகவேண்டும் ; தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை தமிழரசு கட்சி ஆதரிக்கும் என்பவையே அந்த தீர்மானங்களாகும்.

## சங்குக்கு வாக்குகள்

அதேவேளை, அரியநேத்திரன் தேர்தல் பிரசாரங்களில் தீவிரமாக இறங்கியிருக்கிறார். அவரது பிரசாரப் பயணம் யாழ்ப்பாணக்குடா நாட்டில் பொலிகண்டியில் ஆரம்பித்து அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. வடக்கு, கிழக்கில் சகல மாவட்டங்கள் ஊடாகவும் அவர் பயணம் செய்வார். அரியத்தின் பிரசாரத்தின் தொனிப்பொருள் 'நமக்காக நாம்' என்பதாகும். தான் தமிழ்த் தேசியத்தின் ஒரு சின்னம் மாத்திரமே, ஒரு தலைவர் அல்ல என்று அவர் கூறுகிறார்.

அரியநேத்திரனின் அழைப்புக்கு வடக்கு,கிழக்கு தமிழ் மக்கள் எவ்வாறு செவிசாய்ப்பார்கள் என்பது செப்டெம்பர் 21 ஆம் திகதி தெரிந்துவிடும். தமிழ் பொதுவேட்பாளருக்கு தமிழ் மக்கள் அதிகளவில் வாக்களித்தால் தமிழ் அரசியல் செல்நெறியில் ஒரு தீவிரவாத திருப்பத்தை அது ஏற்படுத்திவிடக்கூடும். தமிழர்கள் அவருக்கு குறைந்தளவில் வாக்களித்தால் அது தமிழ்த் தேசியவாதக் கோட்பாட்டினை பலவீனமடையச் செய்துவிடலாம்.

**(கட்டுரையாளரின் வலைப்பதிவில் இருந்து.)**



# பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்களில் தமிழர் பிரச்சினை

வீரகத்தி தனபாலசிங்கம்

மூன்று பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் கடந்தவாரம் வெளியாகின.

முதலில் ஆகஸ்ட் 26 தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க 'வளமான தேசம், அழகான வாழ்க்கை'என்ற தலைப்பில் தனது விஞ்ஞாபனத்தை வெளியிட்டார். அடுத்து ஆகஸ்ட் 29 ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான ஐந்து வருடங்கள்' என்ற தலைப்பிலும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச 'சகலருக்கும் வெற்றி' என்ற தலைப்பிலும் தங்களது விஞ்ஞாபனங்களை வெளியிட்டனர்.

இலங்கையைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்கான தங்களது திட்டங்களுக்கு விஞ்ஞாபனங்களில் முன்னுரிமை கொடுத்திருக்கும் மூவரும் நாடும் மக்களும் எதிர்நோக்குகின்ற பெரும்பாலும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைக் காண்பதற்கான யோசனைகளையும் முன்வைத்திருக்கிறார்கள். ஆனால், அந்த நீண்ட விஞ்ஞாபனங்களைச் சாதாரண மக்கள் அமைதியாக இருந்து முழுமையாக வாசிப்பதில் அக்கறை காட்டுவார்கள் என்பது சந்தேகமே.

தனது அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் கடந்த இரு வருடங்களாக முன்னெடுத்துவரும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடருவதைத் தவிர பொருளாதார மீட்சிக்கு வேறு வழியே கிடையாது என்பதே ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் உறுதியான நிலைப்பாடு. அந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மற்றைய இரு பிரதான வேட்பாளர்களினாலும் ஒழுங்கான முறையில் முன்னெடுக்கமுடியாது என்ற அர்த்தத்தில் பேசிவரும் அவர் தனக்கு ஐந்து வருடகாலத்துக்கு ஆணை தருமாறு நாட்டு மக்களைக் கேட்கிறார். பிரேமதாசவும் அநுரகுமாரவும் கூட சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையைச் சில திருத்தங்களுடன் தொடர்ந்து முன்னெடுக்கப் போவதாக கூறுகின்ற அதேவேளை, மக்களைப் பெரிதும் வதைக்கின்ற வரிகளைக் குறைப்பது குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தப்போவதாகவும் அறிவித்திருக்கிறார்கள். அதனால் எவர் புதிய ஜனாதிபதியாக வந்தாலும், பொருளாதார நெருக்கடியைப் பொறுத்தவரை அவரின் செயற்பாடுகள் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையைப் பின்பற்றியதாகவே அமையப்போகிறது என்பது தெளிவானது.

புதிய அரசியலமைப்பு மற்றும் தேசிய இனநெருக்கடியுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து மூன்று தலைவர்களும் விஞ்ஞாபனங்களில் கூறியிருப்பதைச் சுருக்கமாக நோக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு வெகு முன்னதாகவே மூன்று வேட்பாளர்களும் இன நெருக்கடிக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தங்கள் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். விஞ்ஞாபனங்களிலும் அவர்கள் அதே நிலைப்பாடுகளையே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

புதிய அரசியலமைப்பு ஒன்றை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொண்டு வரும் என்று அநுர குமார நீண்டநாட்களாக கூறிவந்திருக்கின்ற போதிலும், அது தொடர்பில் அவர் விஞ்ஞாபனத்தில் கூறியிருப்பது எவரும் எதிர்பார்க்காததாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் தலைமையிலான அரசாங்க காலத்தில் (2015 --2019) முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையைத் துரிதமாக நிறைவு செய்து புதிய அரசியலமைப்பின் மூலமாக அனைத்து மக்களும் ஆட்சியில் பங்கேற்கக்கூடியவாறு ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனம்,மாவட்டம் மற்றும் மாகாணத்துக்கு அரசியல் பீதியானதும் நிருவாக பீதியானதுமான அதிகாரங்களை பகிர்ந்தளிக்கப்போவதாக

தேசிய மக்கள் சக்தியின் விஞ்ஞாபனம் கூறுகிறது. அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் குறித்து நேரடியாக அதில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதேவேளை ஜனாதிபதி விக்கிரமசிங்க 13 வது



## பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின்

# விஞ்ஞாபனங்களில் தமிழர் பிரச்சினை

திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தங்களால் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையில் அரசியலமைப்பின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படும் என்று கூறியிருக்கிறார். மாகாண சபைகளிடம் இருந்து மத்திய அரசாங்கம் திரும்பப் பெற்றுக்கொண்ட அதிகாரங்கள் மீண்டும் மாகாண சபைகளுக்கு கொடுக்கப்படும் என்றும் மாகாணசபைகளுக்கான பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் தீர்மானிக்கும் பொறுப்பு புதிய பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கிறார்.

தேசிய நல்லிணக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று உறுதியளித்திருக்கும் ஜனாதிபதி உண்மை கண்டறிதல் மற்றும் நல்லிணக்கச் சட்டம் நிறைவேற்றப்படுவதுடன் காணாமல் போனோர் தொடர்பான நவாஸ் ஆணைக்குழுவின் அறிக்கையும் நடைமுறைப்படுத்தப்படும் என்று கூறியிருக்கிறார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் பிரேமதாச மதத்தலைவர்கள், பாராளுமன்ற அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து புதிய அரசியலமைப்பு ஒன்று கொண்டுவரப்படும் என்றும் தற்போதைய அரசியல் முறைமையைப் பாராளுமன்ற முறைமைக்கு மாற்றுவதுடன் ஒரே நாட்டின் கீழ் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் கூடுதல்பட்ச அதிகாரப்பரவலாக்கம் உறுதிசெய்யப்படும் என்றும் கூறுகிறார்.

புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படும் வரை 13 வது திருத்தம் உட்பட தற்போதைய அரசியலமைப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் ; மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளப்பெறப்படமாட்டாது. அதற்கு பதிலாக மாகாண மட்டத்தில் அபிவிருத்திப் பணிகள் பலப்படுத்தப்படும் என்றும் பிரேமதாச வாக்குறுதியளித்திருக்கிறார்.

மூன்று தலைவர்களும் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரப்போவதாக கூறியிருக்கும் அதேவேளை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு குறித்தும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தங்களது அரசாங்கம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்துக்கட்டி பாராளுமன்ற ஆட்சிமுறையை நிலைநாட்டுவதுடன் நிறைவேற்று அதிகாரமற்ற ஜனாதிபதி பதவியை உருவாக்கும் என்று அநுர குமார கூறியிருக்கும் அதேவேளை, ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் தெரிவாகும் புதிய பாராளுமன்றத்திடம் ஒரு வருட காலத்திற்குள் புதிய அரசியலமைப்பை வரையும் பொறுப்பு ஒப்படைக்கப்படும் என்று விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கவேண்டுமா இல்லையா என்பதை புதிய பாராளுமன்றமே தீர்மானிக்கவேண்டும் என்றும் ஜனாதிபதி கூறியிருக்கிறார். இது ஒன்றும் அவர் புதிதாக கூறுகின்ற விடயம் அல்ல. பிரேமதாசவும் அநுரா குமாரவும் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பு குறித்து தீர்மானிக்கும் பொறுப்பு மக்களின் புதிய ஆணையுடன் தெரிவாகும் அடுத்த பாராளுமன்றத்திடமே ஒப்படைக்கப்படவேண்டும் என்று பல மாதங்களுக்கு முன்னரேயே கூறிவந்திருக்கிறார்கள்.

முன்னாள் பிரதம நீதியரசர் பிரியசெத் டெப் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்மொழிவுகளின் அடிப்படையில் புதிய தேர்தல் நடைமுறையைப் புதிய பாராளுமன்றம் அறிமுகப்படுத்தும் ; மாகாணசபை பிரதிநிதிகளையும் சிவில் சமூக உறுப்பினர்களையும் கொண்டதாக அமைக்கப்படும் இரண்டாவது அரசாங்க சபை ( Second State Council ) மாகாணசபைகள் அவற்றின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துகின்றன என்பதை கண்காணிக்கும் என்று விக்கிரமசிங்கவின் விஞ்ஞாபனம் கூறுகிறது. ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு மற்றும் புதிய



## பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின்

# விஞ்ஞாபனங்களில் தமிழர் பிரச்சினை

அரசியலமைப்பு குறித்து சுமார் மூன்று தசாப்த காலமாக பேசப்பட்டு வருகின்ற போதிலும், இதுவரையில் அது தொடர்பிலான எந்த முயற்சியும் ஒப்பேறவில்லை. மூன்று பிரதான வேட்பாளர்களும் என்ன தான் விஞ்ஞாபனங்களில் வாக்குறுதியளித்தாலும், அது விடயத்தில் அவர்களின் அரசியல் நேர்மை குறித்து மக்களுக்கு நிச்சயமாக வலுவான சந்தேகம் இருக்கிறது. அத்துடன் தற்போதைய அரசியல் நிலைவரங்களையும் அரசியல் கட்சிகளுக்கு மக்கள் மத்தியில் இருக்கும் ஆதரவின் மட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது புதிய அரசியலமைப்பை வரைவது போன்ற பொறுப்புமிகுந்த பணிகளை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு பாராளுமன்றத்தில் அரசியல் கட்சிகளிடையே கருத்தொருமிப்பைக் காண்பது சாத்தியமாக இருக்குமா என்பது முக்கியமான ஒரு கேள்வி.

தேசிய இனநெருக்கடியுடன் தொடர்புடைய பிரச்சினைகளைப் பொறுத்தவரை, மூன்று தலைவர்களும் பெரும்பாலும் ஒரேவிதமான நிலைப்பாட்டையே வெளிப்படுத்தப்படுத்தியிருப்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு அம்சமாகும். ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகுவதற்கு முன்னரேயே அவர்கள் தங்களது இந்த நிலைப்பாட்டை பகிரங்கமாகக் கூறினார்கள்.

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் மூன்று வாரங்களே இருக்கும் நிலையில் இந்தத் தடவை பிரதான அரசியல் கட்சிகளின் அல்லது கூட்டணிகளின் பிரசாரங்களில் பெரும்பாலும் இனவாதமற்ற ஒரு போக்கை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. 2019 ஜனாதிபதி தேர்தலின்போது காணப்பட்ட சூழ்நிலையில் இருந்து இது முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது.

தமிழ் அரசியல் கட்சிகள் ஒப்பீட்டளவில் பிரயோசனமான முறையில் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு ஒன்று இன்றைய சூழ்நிலையில் இருக்கிறது. ஆனால், அதைப் பயன்படுத்துவதில் அக்கறை காட்டாமல் வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் இருப்பது துரதிர்ஷ்டவசமானது.

தேசிய இனப்பிரச்சினைக்கு சமஷ்டிமுறையின் அடிப்படையிலான நிரந்தரத் தீர்வைக் கோரி நிற்கும் பெரும்பாலான வடக்கு,கிழக்கு தமிழ்க் கட்சிகள் அதற்கு முதற்படியாக 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தைக் கேட்பது மாத்திரமல்ல அவ்வாறு செய்வதற்கு கொழும்புக்கு நெருக்குதலைக் கொடுக்குமாறு புதுடில்லியையும் கேட்கின்றன.

அவ்வாறு கேட்பதுடன் மாத்திரம் தங்களது பொறுப்பு முடிந்துவிடுகிறது என்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் நினைக்க முடியாது.13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புக்களை பயன்படுத்துவதற்கு அவர்கள் ஒன்றிணைந்து செயற்படவும் வேண்டும். அதற்கு இசைவான சூழ்நிலையை உறுதி செய்வதற்கு அரசியல் தந்திரோபாயத்தைக் கையாள வேண்டும்.

தற்போது மூன்று பிரதான வேட்பாளர்களும் 13 வது திருத்தத்துக்கு அனுகூலமான நிலைப்பாட்டை எடுத்திருப்பதால் அவர்களுடன் தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தி அவர்களில் எவர் ஜனாதிபதியாக வந்தாலும் மற்றைய இருவரும் அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படக்கூடிய எதிர்கால முயற்சிகளை எதிர்க்காமல் இருப்பதற்கான உத்தரவாதத்தைப் பெறவேண்டும். இன்றைய சூழ்நிலையில் அது ஒரு விவேகமான தந்திரோபாயமாக இருக்கமுடியும்.

இந்தக் கட்டுரையாளர் ஒன்றும் 13 வது திருத்தத்தின் ரசிகர் இல்லை. ஆனால், நிலையான தீர்வாக அமையக்கூடிய சமஷ்டி ஏற்பாட்டை நோக்கிய பயணத்தில் முதற்படியாக அந்தத் திருத்தத்தைக் கருதும் தமிழ்க்கட்சிகள் அத்தகையதொரு தந்திரோபாயத்தைக் கடைப்பிடிப்பதில் என்ன தவறு இருக்கப் போகிறது? இலங்கை அரசியலமைப்பில் இருக்கின்ற ஒரேயொரு அதிகாரப்பரவலாக்கல் ஏற்பாடான 13 வது திருத்தத்தை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று கூறுகின்ற பிரிவினரும் தமிழ் அரசியல் சமுதாயத்திற்குள் கணிசமாக இருக்கிறார்கள். எதிர்காலத்தில் கொழும்பு அரசாங்கம் ஒன்று அந்தத் திருத்தத்தை ஒழித்துவிட்டால் அதைப் போன்ற



## பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின்

# விஞ்ஞாபனங்களில் தமிழர் பிரச்சினை

அல்லது அதையும் விட குறைவான ஏற்பாடுகளுடன் கூடிய ஒன்றை மீண்டும் கொண்டுவருவதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கக்கூடிய அரசியல் வல்லமை இன்று தமிழ் மக்களிடம் இருக்கிறதா? இந்தக் கேள்விக்கு இதுவரை பதில் இல்லை. கனவுலக அரசியல் செய்வது சுலபம். ஆனால் நடைமுறைச்சாத்தியமான அணுகுமுறைகளைப் பற்றி சிந்திப்பதே இன்று தமிழ் மக்களுக்கு முக்கியமானது.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை நிறைவுசெய்து புதிய அரசியலமைப்பை கொண்டுவருவது குறித்து அநுரகுமார தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அந்தச் செயன்முறையின் போது 13 வது திருத்தத்தில் உள்ள ஏற்பாடுகளையும் விட மிகவும் விரிவான அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் குறித்து ஆராயப்பட்டதாக அன்றைய எதிர்க்கட்சி தலைவர் காலஞ்சென்ற இரா. சம்பந்தனும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் அடிக்கடி கூறினார்கள். அதனால் 13 வது திருத்தத்தைப் பற்றி இனிமேலும் பேசிக்கொண்டிருக்கவேண்டியதில்லை என்பதும் அவர்களது எண்ணமாக இருந்தது. ஆட்சிமாற்றம் காரணமாக துரதிர்ஷ்டவசமாக அந்த அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை தொடர்ந்து முன்னெடுக்க முடியாமல் போய்விட்டது. ஆனால் பிரதமர் விக்கிரமசிங்க இடைக்கால அறிக்கை அறிக்கை ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இடையில் நின்றுபோன அந்த செயன்முறையை நிறைவு செய்யப் போவதாக தேசிய மக்கள் சக்தி கூறியிருப்பதால் அவர்களின் விஞ்ஞாபனத்தில் 13 வது திருத்தம் குறித்து பிரத்தியேகமாக குறிப்பிடப்படாதது ஒரு குறைபாடு அல்ல என்ற அபிப்பிராயத்தைக் கொண்ட தமிழ் அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள்.

ஆனால், மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக 13 வது திருத்தம் கூட ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்து வந்த சூழ்நிலையில் அந்த திருத்தத்துக்கு அப்பால் செல்வது குறித்த எதிர்பார்ப்புக்களை தமிழ் அரசியல் கட்சிகள் வளர்த்து வந்திருக்கின்றன. அதற்கு இந்தியாவின் தலையீட்டை கடுமையாக எதிர்த்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச இந்தியாவை அவமதிப்பதற்காக 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு கையாண்ட ஒரு தந்திரோபாயமே முதல் காரணம்.

பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் இந்தியப் படைகளின் வெளியேற்றத்துக்கு பிறகு மீண்டும் உள்நாட்டுப்போர் மூண்ட சூழ்நிலைகளில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு அன்றைய ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்க தலைமையில் ஒரு பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. அதில் இருந்தே 13 வது திருத்தத்துக்கு அப்பால் செல்லமுடியும் என்ற நம்பிக்கை தமிழ்க்கட்சிகளுக்கு ஏற்படத் தொடங்கியது. உண்மையில் அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு பிரேமதாச கையாண்ட ஒரு தந்திரோபாயமே அதுவாகும். அதற்கு பின்னரும் சந்திரிகா குமாரதுங்க,மகிந்த ராஜபக்ச ஆகியோரும் 13 வது திருத்தம் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்துகொண்ட அதேவேளை வேறு முயற்சிகளை முன்னெடுத்தனர். ஆனால் எதுவுமே நிறைவு பெறவில்லை. பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வ கட்சி பிரதிநிதித்துவக் குழுவின் அறிக்கையை மகிந்த ராஜபக்ச ஒரு போதும் வெளியிடவில்லை.

இந்த அனுபவங்களை எல்லாம் படிப்பினையாக எடுத்துக் கொண்டு 13 வது திருத்தமாவது தற்போதைக்கு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்யக் கூடிய தந்திரோபாயத்தை தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கடைப்பிடிப்பதே விவேகமானது.

**( நியூஸ் இன்ஏசியா வலைத்தளத்தில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் )**



# சமூகங்களை ஐக்கியப்படுத்தக்கூடிய ஜனாதிபதியே தேவை

கலாநிதி ஜெகான் பெரேரா

ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கு இலங்கை தமிழரசு கட்சி எடுத்த தீர்மானம் அவரது பிரசாரத்துக்கு ஒரு குறிப்பிடத்தக்க ஊக்கத்தைக் கொடுக்கும். அவரது பிரசாரம் ஏற்கெனவே தொடர்ச்சியாக பலம் பெற்றுவருவதுடன் கூட்டங்களுக்கு பெருமளவில் மக்களைக் கவர்ந்திழுக்கிறது. கருத்துக்கணிப்புகளும் அவரது மக்கள் ஆதரவில் முன்னேற்றத்தையே காட்டுகின்றன. தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதான அங்கத்துவக் கட்சியாக இருந்த தமிழரசு கட்சி தமிழ் மக்களின் வாக்குகளை திரட்டுவதில் அதன் ஆற்றலைப் பொறுத்தவரை கணிசமான அரசியல் கனதியைக் கொண்டிருக்கிறது.

தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக சர்வதேச சமூகத்துடன் இடையறாது ஊடாட்டங்களை செய்துவரும் தமிழரசு கட்சிக்கு அந்த சமூகத்தின் மத்தியில் நம்பகத்தன்மை இருக்கிறது. எதிர்க்கட்சி தலைவருக்கு ஆதரவளிப்பதற்கு தீர்மானித்ததன் மூலம் அந்த கட்சி ஏற்கெனவே அவருக்கு ஆதரவை தெரிவித்திருக்கும் முஸ்லிம் கட்சிகளுடனும் மலையக தமிழ் கட்சிகளுடனும் இணைந்து கொண்டுள்ளது.

கட்சியின் உயர்மட்டம் வழங்கும் ஆதரவு மக்களின் ஆதரவு கிடைக்கும் என்பதற்காக உத்தரவாதம் அல்ல. ஏற்கெனவே எதிர்க்கட்சி தலைவருக்கு ஆதரவைத் தெரிவித்த முஸ்லிம் கட்சிகளினதும் மலையக தமிழ் கட்சிகளினதும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தலைமைத்துவங்களுக்கு கீழ்ப்படிய மறுத்து இன, மத சிறுபான்மைச் சமூகங்களுக்கு உறுதியான நேசக்கரத்தை நீட்டும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கிறார்கள்.

தமிழரசு கட்சியைப் பொறுத்தவரையிலும் கூட, அதன் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராஜாவும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் கட்சியின் தீர்மானத்தில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. சுகவீனம் காரணமாக கட்சியின் மத்திய செயற்குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று சேனாதிராஜா கூறுகிறார். சிறீதரன் ஏற்கெனவே தமிழ் பொது வேட்பாளர் பி. அரியநேத்திரனுக்கு ஆதரவளிப்பதற்கு தனிப்பட்ட முறையில் தீர்மானத்தை எடுத்தார்.

எதிர்க்கட்சி தலைவருக்கு கிடைத்திருக்கும் இன, மத சிறுபான்மைச் சமூக கட்சிகளின் ஆதரவும் கூட அவரது தேர்தல் வெற்றிக்கான உத்தரவாதம் அல்ல. 2019 ஜனாதிபதி தேர்தலிலும் இதே கட்சிகளின் ஆதரவு எதிர்க்கட்சி தலைவருக்கு கிடைத்த போதிலும் கூட கோட்டாபய ராஜபக்சவிடம் அவர் தோல்வி கண்டார். தேசியவாத பிரசாரங்களை முன்னெடுத்த ஜனாதிபதி ராஜபக்சவுக்கு சிங்கள பெரும்பான்மை இனத்தவர்களின் பேராதரவு கிடைத்தது.

இந்த தடவை மூன்று பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களும் தங்களது தேர்தல் பிரசாரங்களின்போது இனத்துவ தேசியவாதத்தில் நாட்டம் காட்டவில்லை. தேர்தல்களின்போது இனத்துவ தேசியவாத உணர்வுகளைத் தூண்டிவிட்டு மற்றைய சமூகங்களை எதிரிகளாகக் காட்டும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவது வழமையாக இருந்துவந்த கடந்த காலத்தில் இருந்து இது வேறுபட்டதாக இருப்பது வரவேற்கத்தக்கது.

## மிதவாத விஞ்ஞாபனங்கள்

மூன்று பிரதான வேட்பாளர்களும் குறுகிய இனத்துவ தேசியவாதப் பிரச்சினைகளினால் திசைதிருப்பப்படாமல் இனப்பிரச்சினை தொடர்பில் ஆக்கபூர்வமான நிலைப்பாடுகளை கடைப்பிடித்திருக்கிறார்கள். 'புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படும் வரை அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் உட்பட தற்போதைய அரசியலமைப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளப்பெறப்படமாட்டாது. பதிலாக் மாகாண மட்டத்தில் அபிவிருத்தி பலப்படுத்தப்படும்' என்று எதிர்க்



# சமூகங்களை ஐக்கியப்படுத்தக்கூடிய ஜனாதிபதியே தேவை

கட்சி தலைவரின் தேர்தல் விஞ்ஞாபனம் கூறுகிறது.

இது மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்வதாக முன்னர் வழங்கிய வாக்குறுதியில் இருந்து அவர் பின்வாங்கவில்லை என்பதை காட்டுகிறது. தான் நடைமுறைப்படுத்தப் போகின்ற விடயங்களைப் பொறுத்தவரை பிரேமதாச தனது போட்டியாளர்களை விடவும் திட்டவட்டமான நிலைப்பாட்டைக் கொண்டவராக இருந்துவருகிறார்.

அதேவேளை, ஜனாதிபதி விக்கிரமசிங்க 13 வது திருத்தத்தின் பிரகாரம் மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் பரவலாக்கம் செய்யப்படும் என்று கூறியிருக்கிறார். மாகாணங்களிடமிருந்து மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்ட அதிகாரங்கள் திருப்பி வழங்கப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார். ஆனால் மாகாணசபைகளுக்கான பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் தீர்மானிப்பது புதிய பாராளுமன்றத்தின் பொறுப்பு என்று கூறி அது விடயத்தில் மிகுந்த எச்சரிக்கை உணர்வை வெளிப்படுத்தியிருக்கிறார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்க நல்லாட்சி அரசாங்கத்தின்போது 2015 ஆம் ஆண்டுக்கும் 2019 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை துரிதமாக நிறைவு செய்யப்போவதாகவும் ஆட்சிமுறையில் சகல மக்களும் பங்கேற்கக் கூடியதாக ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்துக்கும் மாவட்டத்துக்கும் மாகாணத்துக்கும் அரசியல் மற்றும் நிருவாக அதிகாரங்களை பகிர்ந்தளிக்கப் போவதாகவும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில்ள கூறியிருக்கிறார்.

இந்த தேர்தலில் மையப்பிரச்சினை பொருளாதார நெருக்கடியும் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தின் வழியில் நாட்டை எவ்வாறு மீட்டெடுப்பது என்பதுமேயாகும். 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி இன, மத அல்லது பிராந்திய வேறுபாடுகளுக்கு அப்பால் சனத்தொகையின் சகல பிரிவினரையும் தொடர்ந்து பாதித்துக் கொண்டேயிருக்கிறது.

பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு இரு வருடங்கள் கடந்த நிலையில் இலங்கையின் வறுமை மட்டம் 13 சதவீதத்தில் இருந்து 26 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. 70 சதவீதத்தை எட்டிய பணவீக்கம் வாழ்க்கைத் தரங்களை படிப்படியா அரித்துவிட்டது.

இந்த பின்னணியில், ஊழல் மற்றும் வளங்கள் தவறான முறையில் ஒதுக்கப்பட்டது தொடர்பான பிரச்சினைகள் தற்போதைய அரசியல் விவாதத்தின் மையப்பொருளாக விளங்குகின்றன. அவை கடுமையான அச்சவுணர்வையும் வெறுப்புணர்வையும் தூண்டிவிடக்கூடியவை. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு றிப்பீட்டர் துப்பாக்கிகளை வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்த முடிவு இதன் ஒரு குறிகாட்டியாக இருக்கக்கூடும்.

## துருவமயமாதலை குறைத்தல்

இனமோதலின் காரணமாக முன்னைய தேர்தல்களின்போது காணப்பட்ட துருவமயமாதலும் அச்சமும் வர்க்க மோதலின் வடிவத்தை எடுக்கக்கூடிய ஆபத்தே தற்போதைய தேர்தலின் துரதிர்ஷ்டவசமான அம்சமாகும். தேசிய மக்கள் சக்தி / ஜே.வி.பி. யின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரா குமார திசாநாயக்கவுக்கு அதிகரித்திருக்கும் ஆதரவே இதற்கு காரணமாகும். பொருளாதார நெருக்கடியும் ‘முறைமை மாற்றத்தை’ வேண்டிநின்ற போராட்ட இயக்கமும் மக்கள் மத்தியில் அவரின் கட்சிக்கு பேராதரவை வளர்த்திருக்கின்றன.

நாட்டை ஆட்சிசெய்துவரும் உயர் அரசியல் அதிகார வர்க்கத்துடனும் பெரும் வர்த்தக சமூகத்துடனும் அநுரா குமார தொடர்புகளைக் கொண்டிராதவர் என்பதால் மாற்றத்தை விரும்புகிறவர்கள் அவருக்கு வாக்களிக்க விரும்புகிறார்கள். ஆனால் இது அவர் வெற்றிபெறும் பட்சத்தில் நடக்கக்கூடியவை பற்றி அச்சத்தை தோற்றுவிக்கிறது. ஜே.வி.பி.யில் தலைமைத்துவ பதவிகளில் இருப்பவர்களின் கடந்த கால மார்க்சியப் பின்னணியும் கடந்த கால வன்முறைகளின் நினைவும் இந்த அச்சத்துக்கு வலுச்சேர்க்கின்றன.

இன்னும் ஒரு வாரத்தில் ஜனாதிபதி.தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், துருவமயமாதல் மட்டமும் தேர்தலுக்கு பின்னரான நிலைவரம் குறித்து நிலவும் அச்ச

வுணர்வும் தணிவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதில் ஜனாதிபதி வேட்பாளர்கள் அக்கறை காட்டினால் அது வரவேற்கக்கூடியதாக இருக்கும். குறிப்பாக, இன,மத சமூகங்களாக இருந்தாலென்ன, சமூக – பொருளாதார வர்க்கமாக இருந்தாலென்ன சனத்தொகையின் எந்த பிரிவினரும் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்படவோ அல்லது தண்டனைக்குரிய நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படவோ மாட்டார்கள் என்பதை மக்களுக்கு உறுதி செய்ய வேண்டும்.

குற்றச்செயல்களுக்கு அல்லது ஊழல் மோசடிகளுக்கு தனிநபர்களை பொறுப்புக்கூற வைப்பது ஒரு விடயம், அதேவேளை கூட்டாக பொறுப்புக்கூற வைப்பது வேறு விடயம்.முன்னையது அவசியமானது. பின்னையது ஏற்புடையதல்ல.தேர்தலில் மக்கள் வழங்கும் தீர்ப்பை மதிப்பதாகவும் எதிர்பாராமல் தோல்வியைச் சந்தித்தால் தங்களது ஆதரவாளர்கள் நாசகாரச் செயல்களில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப் போவதில்லை என்றும் வேட்பாளர்கள் சூளுரைக்கவேண்டியதும் அவசியமாகும். எதிர்காலத்துக்கு சிறந்த பாடங்களைப் புகட்டுவதற்கு கடந்த பல தசாப்தகால கூட்டுத் தவறுகள் எம்முன்னால் உள்ளன.

அதனால் தோல்வியடையும் வேட்பாளர்களும் அவர்களது ஆதரவாளர்களும் சட்டத்தினால் பாதுகாக்கப்படுவர் என்பதை உறுதிப்படுத்த வேண்டியது ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறும் வேட்பாளரைப் பொறுத்தவரை அவசியமான ஒரு பணியாகும். வெற்றி பெறுபவரின் விஞ்ஞாபனம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்கிற அதேவேளை அதில் கடந்த காலக் குற்றங்களுக்காக சம்பந்தப்பட்டவர்களை பொறுப்புக்கூற வைப்பது ஒரு அங்கமாக இருக்கிறதோ இல்லையோ சட்டம் முறையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

மூன்று பிரதான வேட்பாளர்களினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் நாட்டின் நலன்களையும் மேம்பாட்டையும் நோக்கமாகக் கொண்டவை. சமூகத்தின் சகல பிரிவினரையும் அரவணைக்கும் நல்லுணர்வுடன் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகும். எதிரணியில் உள்ளவர்களும் மதிக்கப்படுகின்றதும் அவர்களது கருத்துக்களும் அக்கறையுடன் கவனத்தில் எடுக்கப்படுகின்றதுமான ஒரு அரசியல் கலாசாரம் கட்டிவளர்க்கப்பட வேண்டும். தங்களது ஆதரவாளர்களையும் வாக்கு வங்கிகளையும் பற்றி அல்லாமல் முதலில் நாட்டைப் பற்றி சிந்திக்கின்ற விவேகமும் தொலைநோக்கும் கொண்ட அரசியல்ஞானிகளே இன்று இலங்கைக்கு தேவைப்படுகிறார்கள், வெறும் அரசியல்வாதிகள் அல்ல.

**மூன்று பிரதான வேட்பாளர்களும் குறுகிய இனத்துவ தேசியவாதப் பிரச்சினைகளினால் திசைதிருப்பப்படாமல் இனப்பிரச்சினை தொடர்பில் ஆக்கபூர்வமான நிலைப்பாடுகளை கடைப்பிடித்திருக்கிறார்கள். புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படும் வரை அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் உட்பட தற்போதைய அரசியலமைப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளப்பெறப்படமாட்டாது. பதிலாக்மாகாண மட்டத்தில் அபிவிருத்தி பலப்படுத்தப்படும் என்று எதிர்க்கட்சி தலைவரின் தேர்தல் விஞ்ஞாபனம் கூறுகிறது.**

# சமூகங்களை ஐக்கியப்படுத்தக்கூடிய ஜனாதிபதியே தேவை





## ஜனாதிபதித் தேர்தல்:

# தமிழ்மக்கள் அறிவுபூர்வமாக முடிவெடுப்பார்களா?

நிலாந்தன்

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களில் குறிப்பாக.கணித விஞ்ஞானப் பிரிவுகளைச் சேர்ந்த கல்வி நிலையங்களுக்கு என்னென்ன பெயர்கள் என்று பார்த்தால், விஞ்ஞான மண்டபம்; விஞ்ஞான உலகம்; விஞ்ஞான சமுத்திரம்; விஞ்ஞான நீரோட்டம்.விஞ்ஞான மூலை,இணைந்த கணிதத்தில் வெற்றி,மிஸ்டர் பிஸிக்ஸ்,இப்படியே நீண்டு கொண்டு போகும். இப்பெயர்கள் யாவும் கணிதம் விஞ்ஞானம் போன்ற பாடங்கள் தொடர்பான ஒரு சமூகத்தின் அபிப்பிராயங்களைக் காட்டுபவை. இந்நிறுவனங்களில் பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் படிக்கிறார்கள்.


யாழ்ப்பாணத்தின் முன்னணி தனியார் பாடசாலைகள் சிலவற்றில் கணித அல்லது விஞ்ஞானப் பட்டதாரி ஒருவர்தான் அதிபராகவும் இருக்கலாம் என்று எழுதப்படாத விதி உண்டு. கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் குறித்து தமிழ் சமூகத்தில் உயர்வான மதிப்பீடுகள் உண்டு. இவ்வாறு கணித விஞ்ஞானத் துறைகளில் அதிகம் நாட்டமுள்ள ஒரு சமூகமானது தன் நடைமுறை வாழ்வில் எல்லாவற்றிலும் விஞ்ஞானபூர்வமான அணுகுமுறைகளை கொண்டிருக்க வேண்டும். வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கணிதமாக அணுக வேண்டும். ஆனால் தனது பாடத் தெரிவுகளில் விஞ்ஞானத்துக்கும் கணிதத்துக்கும் முக்கிய இடத்தைக் கொடுக்கும் ஒரு சமூகம், தனது அரசியல் தெரிவுகளில் எப்படிப்பட்ட முடிவுகளை எடுத்து வருகின்றது?



உடுப்பு வாங்கப் போனால் புடவைக் கடையில் எத்தனை மணித்தியாலத்தை எமது பெண்கள் செலவழிக்கிறார்கள்? சந்தையில் நாளாந்தம் காய்கறி வாங்கும் பொழுதும் எவ்வளவு கவனமாகத் தெரிந்தெடுக்கிறோம் ? தக்காளிப் பழத்தை நிறம் பார்த்து; அழுத்திப் பார்த்து ஒவ்வொன்றாக தெரிகிறோம் .கத்தரிக்காயை நிறம் பார்த்து;அழுத்திப் பார்த்து ஒவ்வொன்றாகத் தெரிகிறோம். இவ்வாறு அன்றாட வாழ்வில் தெரிவு என்று வரும் பொழுது கவனமாகவும் நேரமெடுத்தும் பொருட்களை வாங்கும் ஒரு மக்கள் கூட்டம், தனது அரசியலில் அவ்வாறு நிதானமாகவும் கணிதமாகவும் விஞ்ஞானபூர்வமாகவும் சிந்திக்கின்றதா?

அவ்வாறு விஞ்ஞானபூர்வமாக சிந்தித்திருந்தால் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் எப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்திருக்க வேண்டும்? எப்பொழுது எடுத்திருந்திருக்க வேண்டும் ?

தபால் மூல வாக்களிப்புக்கு விரல் விட்டு எண்ணக்கூடிய நாட்கள்தான் உண்டு. ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பெரிய கட்சி எந்த ஜனாதிபதி



## ஜனாதிபதித் தேர்தல்:

# தமிழ்மக்கள் அறிவுபூர்வமாக முடிவெடுப்பார்களா?

வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பில் தன் முடிவை அறிவிக்கவில்லை. இன்னொரு கட்சி பகிஸ்கரிக்கின்றது. ஏனைய கட்சிகள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துகின்றன. இதில் எது விஞ்ஞானபூர்வமான முடிவு ?

அரசியல் என்பது சாத்தியக்கூறுகளின் கலை. சாத்தியக்கூறுகளைக் கையாள்வது என்பது ஒரு கணித ஒழுக்கம். அப்படிப் பார்த்தால் தமிழ் மக்கள் தம் முன்னால் இருக்கும் எல்லா சாத்தியக்கூறுகளையும் ஆழமாகப் பரிசீலித்து முடிவுகளை எடுக்கின்றார்களா?

தமது கட்சிகளும் தலைவர்களும் எடுக்கும் முடிவுகளை குறித்து தமிழ் மக்கள் கேள்வி கேட்கின்றார்களா? நீங்கள் எந்த அடிப்படையில் முடிவுகளை எடுத்தீர்கள் என்று தமது தலைவர்களிடம் அவர்கள் கேள்வி கேட்பதுண்டா ?

சந்தையில் காய்கறிகளைத் தெரியும்பொழுது தெரிவு பிழைத்தால் உணவு வயிற்றில் நஞ்சாகிவிடும். பள்ளிக்கூடத்தில் பாடத் தெரிவு பிழைத்தால் கல்வி நரகமாகிவிடும். உடுப்புக் கடையில் தெரிவு பிழைத்தால் குறிப்பிட்ட நபரின் தோற்றக் கவர்ச்சி குறைந்து விடும். ஆனால் அரசியலில் தெரிவு பிழைத்தால் என்ன நடக்கும் ?

2009 க்கு பின் வந்த முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் மத்தியில் இருந்த மூத்த தலைவராகிய சம்பந்தர் தீர்க்கதரிசனம் மிக்க ஒரு முடிவை எடுத்திருக்கலாம். அதில் அவர் தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டு இருந்திருந்தால் தமிழ் அரசியலின் போக்கே வேறு திசையில் போயிருந்திருக்கும். சம்பந்தரின் பூதவுடல் தந்தை செல்வா கலையரங்கில் கூரை பதிந்த அந்த சிறிய மண்டபத்தில் விசிறிகளின் கீழே தனித்து விடப்பட்ட அவலம் ஏற்பட்டிருக்காது. ஓர் அரசனைப் போல அவருக்கு ராஜ மரியாதை கிடைத்திருந்திருக்கும்.

ஆனால் சம்பந்தர் ஒரு முதிய தலைவராகவும் அனுபவத்தில் பழுத்த தலைவராகவும் அன்று முடிவெடுக்கவில்லை. போருக்குத் தலைமை தாங்கிய ஒரு தளபதிக்கு வாக்களிப்பது என்று முடிவெடுத்தார்..

அந்தத் தளபதி,போருக்கான அரசியல் தீர்மானத்தை எடுத்து போரை வழிநடத்திய ராஜபக்ச குடும்பத்துக்கு எதிராகத் திரும்பியிருந்தார்.அது போர் வெற்றிக்கு உரிமை கோருவதில் வந்த போட்டி. அவ்வாறு ராஜபக்ஸக்களுக்கு எதிராகத் திரும்பிய தளபதியை வைத்து ராஜபசக்களை-அவர்கள் தமிழ் மக்களைக் கொன்று குவித்தனர் என்பதற்காக அல்ல,மாறாக-அவர்கள் சீனாவை நோக்கிச் சாய்கிறார்கள் என்பதற்காக,அரங்கில் இருந்து அகற்ற முயற்சித்த நாடுகளின் கொள்கைத் தீர்மானங்களைப் பின்பற்றி தமிழ்த் தரப்பு முடிவெடுத்தது. அதன் விளைவாக சரத் பொன்சேகாவோடு ஒரு உடன்படிக்கையும் செய்து கொள்ளப்பட்டது. விளைவாக அந்தத் தேர்தலில் சரத் பொன்சேகா மட்டும் தோற்கவில்லை, சம்பந்தரும் தோற்கத் தொடங்கினார். சம்பந்தரின் வழியும் தோற்கத் தொடங்கியது.

தமிழ் மக்களை அழிக்கும் போருக்கான அரசியல் தீர்மானத்தை எடுத்து, அதற்காக அனைத்துலக சமூகத்தை தமிழ் மக்களுக்கு எதிராக ஒன்று திரட்டிய ஒரு குடும்பத்துக்கு எதிராக வாக்களிக்கிறோம் என்று நினைத்துக் கொண்டு, தமிழ் மக்கள் அந்த குடும்பத்தின் ஆணையை ஏற்றுப் போரை முன்னெடுத்த ஒரு தளபதிக்கு வாக்களித்தார்கள். போருக்குத் தலைமை தாங்கிய



## ஜனாதிபதித் தேர்தல்:

# தமிழ்மக்கள் அறிவுபூர்வமாக முடிவெடுப்பார்களா?

ஒரு தளபதிக்கு வாக்களித்து விட்டு, அந்தப் போரை ஒரு இன அழிப்பு போராகவும் அங்கே போர் குற்றங்கள் நடந்தன என்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் நடந்தன என்றும் அனைத்துலக சமூகத்தின் முன் போய் நின்று முறையிடுவது ஒரு புத்திசாலியான சமூகம் செய்யக் கூடிய அரசியலா?

சரத் பொன்சேகா இப்பொழுதும் தனது தேர்தல் பிரச்சாரங்களில் தான் மனித குண்டினால் தாக்கப் பட்ட பொழுது பயணித்த காரை ஒரு காட்சிப் பொருளாகக் காவித் திருக்கிறார். ஆனால் அவருடைய பிரச்சாரக் கூட்டங்களுக்கு சிங்கள மக்கள் வருவது குறைந்து விட்டது. அந்தக் காருக்கு இருந்த கவர்ச்சி குறைந்துவிட்டது.

ஆனால் அந்தப் போரை இன அழிப்பு போர் என்று குற்றம் சாட்டும் ஒரு மக்கள் கூட்டம், அப் போரை முன்நின்று நடாத்திய ஒரு தளபதிக்கு, அந்தப் போரில் வெற்றி கொண்டதற்காகவே ஃபீல்ட் மார்ஷல் விருது பெற்ற ஒரு தளபதிக்கு, அந்தப் போர் நடந்து கிட்டத்தட்ட ஓராண்டு கழிந் திருந்த ஒரு காலகட்டத்தில், அந் தப் போரினால் அகதியானவர்கள் அப்பொழுதும் நலன் புரி நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில், அந்த போரினால் காணாமல் போனவர்களை உறவினர்கள் தேடிப் போராட முடியாதிருந்த ஒரு காலச் சூழலில், அந்தப் போரில் கைது செய்யப்பட்ட ஆயிரக்கணக்கானவர்கள் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில்,கண்ணை மூடிக்கொண்டு வாக்களித்தது.

கணிதத்தை விஞ்ஞானத்தை விரும்பிக் கற்கும் ஒரு மக்கள் எடுக்கக்கூடிய புத்திசாலித்தனமான முடிவா அது? அல்லது தீர்க்கதரிசனமும் துணிச்சலும் மிக்க முடிவா அது?

நிச்சயமாக இல்லை. அந்த ஜனாதிபதித் தேர்தலை சம்பந்தர் பாதிக்கப்பட்ட மக்களின் கூட்டுக் காயங்களுக்கு ஊடாகவும் கூட்டு மன வடுக்களுக்கு ஊடாகவும் சிந்தித்து இருந்திருந்தால் முடிவு வேறு விதமாக அமைந்திருந்திருக்கும். அவருடைய இறுதி ஊர்வலத்தில், தந்தை செல்வாவின் ஊர்வலத்தில் திரண்டதுபோல ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருந்திருப்பார்கள்.

ஆனால் நாடாளுமன்றத்தில் ஒப்பீட்டளவில் அதிக தமிழ் ஆசனங்களுக்குத் தலைமை தாங்கிய ஒரு தலைவர் அரசியலைக் கணிதமாக மதிப்பீடு செய்யத் தவறினார்.முடிவுகளை விஞ்ஞானபூர்வமாக எடுக்கத் தவறினார். குறைந்தபட்சம் முடிவுகளை இதயபூர்வமாக எடுத்திருந்தால்கூட நிலைமை வேறுவிதமாக அமைந்திருக்கும். அன்று எடுக்கப்பட்ட விஞ்ஞானபூர்வமற்ற முடிவுகளின் விளைவுதான் இன்றுள்ள தமிழ் அரசியலாகும்.

இவ்வாறாக கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் தமிழ் அரசியலில் எடுக்கப்பட்ட புத்திபூர்வமற்ற விஞ்ஞானபூர்வமற்ற முடிவுகள் அனைத்தையும் தமிழ் மக்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். காய்தல் உவத்தல் இன்றிப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.தமது வாழ்வின் அன்றாட தேவைகளுக்காக சுண்டிப் பார்த்து பொருட்களை வாங்கும் ஒரு மக்கள் கூட்டம், அரசியலிலும் அவ்வாறு சுண்டிப் பார்த்து முடிவெடுக்குமா? தமிழ்ப் பொது வேட்பாளருக்கு திரண்டு சென்று வாக்களிக்குமா?




# மக்ரோன் நியமித்த பழைமைவாத - வலதுசாரி புதிய பிரதமருக்கு எதிர்ப்பு!

ஜங்கரன் விக்கினேஸ்வரா

பிரான்சில் ஆயிரக்கணக்கான மக்கள் கடந்த சனிக்கிழமையன்று (7/9/24) தெருக்களில் இறங்கி, இம்மானுவேல் மக்ரோனின் மத்திய வலதுசாரி மிஷெல் பார்னியரை (Michel Barnier) பிரதமராக நியமித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராடினர்.

இன்னமும் பார்னியர் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டதற்கு எதிராக பிரான்சில் போராட்டக்காரர்கள் பேரணி நடத்தி வருகின்றனர். அதேவேளை தேர்தல் முடிவுகளை மக்ரோன் புறக்கணித்து விட்டார் என்று 74% பிரெஞ்சு மக்கள் கருதுவதாகவும், 55% பேர் அவர் அவற்றைத் திருடிவிட்டதாகவும் நம்புவதாகக் காட்டும் கருத்துக்கணிப்பை “Polster Elabe‘ ஊடகம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டது.

அத்துடன் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோனை கண்டித்தும் நாடு தழுவிய பீதியில் பார்னியர் நியமனத்திற்குப் பிறகு நாண்டேஸில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தலைநகர் மட்டுமின்றி, மேற்கில் நான்டெஸ், தெற்கில் நைஸ் மற்றும் மார்செய்ல் மற்றும் கிழக்கில் ஸ்ட்ராஸ்பேர்க்கிலும் எதிர்ப்புக்கள் நடந்தன.

ஐரோப்பிய ஊடகத் தகவலின்படி, 100,000 க்கும் மேற்பட்ட இடதுசாரி ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரான்ஸ் முழுவதும் தெருக்களில் இறங்கி போராடி உள்ளனர். இதற்கு வலதுசாரி மிஷெல் பார்னியரை பிரதமராக நியமிப்பதற்கான ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் முடிவே காரணமாகும்.

அத்துடன் இடதுசாரி கட்சிகள் அதிபர் மக்ரோன் தேர்தல்களைத் திருடியதாகக் குற்றம் சாட்டி உள்ளனர். இதேவேளை உள்துறை அமைச்சகம், பாரிஸில் 26,000 பேர் உட்பட நாடு முழுவதும் 110,000 பேர் தெருக்களில் இறங்கி, வலதுசாரி மிஷெல் பார்னியரை பிரதமராக நியமிப்பதற்கான ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் முடிவை எதிர்த்து பிரான்ஸ் முழுவதும் ஆயிரக்கணக்கானோர் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர் என்றும் அறிவித்துள்ளது.

## அதிபர் மக்ரோன் பதவி விலக வேண்டுதல்:

புதிய பிரதமரான பழைமைவாதப் போக்கை ஆதரிக்கும் திரு. மிஷெல் பானியே (Michel Barnier) நியமிக்கப்பட்டதற்கு






# மக்ரோன் நியமித்த பழைமைவாத – வலதுசாரி புதிய பிரதமருக்கு எதிர்ப்பு!

எதிராக முற்போக்குச் சிந்தனை கொண்டோர் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

பிரெஞ்சு அதிபர் இம்மானுவெல் மக்ரோன் (Emmanu-el Macr-on) அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொள்ள முயல்வதாகவும் அவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

அண்மைய போராட்டங்களில் தலைநகர் பாரிஸில் மட்டும் பல்லாயிரம் பேர் திரண்டதாகக் காவல்துறை கூறுகிறது. ஆனால் அதைவிட மேலும் அதிகமானோர் கூடியதாக ஏற்பாட்டாளர்கள் சொல்கின்றனர். நீஸ் (Nice), மார்சே (Marseille) நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் மேலும் நடந்தன.

பிரான்ஸில் அரசியல் இழுபறி நிலவும் இவ்வேளையில் அதிபர் மக்ரோன் பதவி விலகவேண்டும் எனும் குரல் வலுத்து வருகிறது.

## பிரெக்சிட் பேச்சுவார்த்தையாளர்:

பிரான்சின் அரசியல் முட்டுக்கட்டைக்கு மத்தியில் இடதுசாரி அரசாங்கத்தை அமைக்க மக்ரோன் நிராகரித்து,

73 வயதான பார்னியரை பிரதம மந்திரியாக நியமித்தார். மிஷெல் பார்னியர் முன்னாள் பிரெக்சிட் பேச்சுவார்த்தையாளர் ஆவார்.

கடந்த ஜுலை வாக்கெடுப்பில் முதலிடம் பிடித்த புதிய பாப்புலர் ஃப்ரண்ட் (NFP) கூட்டணியின் வேட்பாளரை தேர்வு செய்ய மக்ரோன் மறுத்ததை அடுத்து, தீவிர இடதுசாரியான பிரான்ஸ் அன்போட் (LFI) கட்சியின் தலைமையிலான இடது, மக்ரோன் தேர்தலை திருடியதாக குற்றம் சாட்டியுள்ளார்.

பல ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் கோபத்தை மக்ரோன் மீது செலுத்தினர் மற்றும் சிலர் அவரை ராஜினாமா செய்யுமாறு அழைப்பு விடுத்தனர்.

## ஐந்தாவது குடியரசு சரிகிறது!

ஐந்தாவது குடியரசு சரிந்து கொண்டிருக்கிறது என்று எதிர்கட்சியின் மனோன் போனிஜோல் கூறியுள்ளார். பார்னியருக்கு வேலை கொடுப்பதன் மூலம் மக்ரோன் தீவிர வலதுசாரிகளை அரசாங்கத்தில் இருக்க அனுமதிக்கிறார் என்று எதிர்ப்பாளர்கள் மிக காட்டமாக நம்புகிறார்கள் என்றார்.

பிரான்ஸின் அரசியல் நிலப்பரப்பில் முன்னெப்போதையும் விட தீவிர வலதுசாரிகள் மிகவும் சக்திவாய்ந்தவர்களாக இருக்க மக்ரோன் கதவைத் திறந்தார் என்றும் அவர் கூறியுள்ளார். மேலும் மக்ரோன் ஜனநாயகத்தை கேலிக் கூத்தாக்கியதாக உணர்வதாக அவர் கூறியுள்ளார்.

பிரான்ஷ் ஊடகமான வெள்ளிக்கிழமையன்று ஒரு கணக்கெடுப்பை வெளியிட்டது. பிரெஞ்சு மக்களில் 74 சதவீதம் பேர் மக்ரோன் தேர்தல் முடிவுகளைப் புறக்கணித்ததாகக் கருதினர், 55 சதவீதம் பேர் அவர் அவற்றைத் திருடியதாக நம்புகிறார்கள் என அந்த கருத்து கணக்கெடுப்பு தகவலை வெளியிட்டது.



# மக்ரோன் நியமித்த பழைமைவாத – வலதுசாரி புதிய பிரதமருக்கு எதிர்ப்பு!

## மக்ரோன் தேர்தல் முடிவுகளை அவமதிக்கிறாரா ?

பிரான்சின் மக்ரோனின் புதிய பிரதமர் தேர்வு, கடந்த தேர்தல்களின் முடிவைப் பிரதிபலிக்கவில்லை என்று எதிர் கட்சியினர் கருதுகின்றனர்.

பார்னியரின் நியமனத்திற்கு எதிர்க்கும் வகையில், 50க்கும் மேலான சட்டமன்ற உறுப்பினர்கள், இடதுசாரிக் கட்சித் தலைவர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் மாணவர் அமைப்புகள் வெகுஜனப் போராட்டங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இத் நிலையில், பாராளுமன்றத்தில் நான்காவது பெரிய ஃஹுண்கீணீதஞடுடிஞிச்டிணண் கட்சி அக்டோபர் 1 அன்று முதல் தொடர் வேலைநிறுத்தம் செய்ய கோரியுள்ளனர்.

## இடதுசாரிகள் கடும் எதிர்ப்பு:


பிரான்சின் புதிய பிரதமராக வலதுசாரி கட்சியை சேர்ந்தவரை ஜனாதிபதி இமானுவல் மேக்ரான் தெரிவு செய்துள்ளதற்கு இடதுசாரிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். ஜனநாயக மறுப்பை நிகழ்த்தியுள்ளதாகவும், வலதுசாரி அரசியல்வாதியைத் தெரிவு செய்திருப்பதன் மூலம் ஜனாதிபதி மேக்ரான் ஜனநாயக மறுப்பை நிகழ்த்தியுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நாடாளுமன்றத்திற்கான கடந்த ஜூலை தேர்தலில் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை எந்த கூட்டணியும் பெறாத நிலையில், சுமார் 2 மாதங்களுக்கு பின்னர் பிரதமர் பொறுப்புக்கு பார்னியேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதனை எதிர்த்த நிலையிலேயே தீவிர இடதுசாரி கட்சியினர் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பார்னியேர் பிரதமராக அறிவிக்கப்படும் முன்னர் மீஊக கட்சியின் 37 வயது Lucie Castets என்பவரை பிரதமராக தெரிவு செய்ய மறுத்தால், மக்ரோன் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைப்போம் என்று அக்கட்சி அச்சுறுத்தி உள்ளது.






# ‘பேசுவோம் போரிடுவோம்’ படைத்த க.வே.பாலகுமாரன்:

# ஈழப் புரட்சிக்காக ஆகுதியாகிய தர்க்கீகவாதி!!

நவீனன்

(நறுங் குறுந்தாடிக்கு சொந்தக்காரனான தோழர் வே.பாலகுமார் புன்முறுவல் என்றும் பூத்தவரும், நேரியபார்வை கொண்ட பண்பான தலைமைத்துவத்தின் அடையாளமாக என்றும் மிளிர்ந்தவர். ஈழப் புரட்சிக்காக தன்னையே ஆகுதியாக்கிய தர்க்கீகவாதி க.வே.பாலகுமாரனின் 77 வது பிறந்த நாள் (15 - 09 - 1947) நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது)

புன்முறுவல் என்றும் பூத்த குறுந்தாடிக்கு சொந்தக்காரனான தோழர் வே.பாலகுமார் நேரிய பார்வை கொண்ட பண்பான தலைமைத்துவத்தின் அடையாளமாக என்றும் மிளிர்ந்தவர். தமிழர் தேசம் திட்டமிட்ட இன வழிப்பை எதிர் கொண்டு அதற்கெதிராக போராட வேண்டிய வரலாற்றை நோக்கிப் பயணித்த காலத்தில் தன்னெழுச்சியாக தன் தலைமையில் ஒரு விடுதலை இயக்கம் கட்டி போராட எழுந்தவர் க. வே. பாலகுமாரன் அவர்கள்.

இன விடுதலைக் கனவைச் சுமந்து இன்னமும் நிற்கும் தமிழரின் போராட்ட வாழ்வியலை பேசுவோம் போரிடுவோம் எனும் புத்தகத்தின் ஒவ்வொரு கட்டுரையும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று ஆவணச் சாட்சியங்களாக விளங்குகின்றன.




தமிழ் தேசத்தின் விடுதலைக் கனவைச் சுமந்து நிற்கும் ஈழத்தின் தொன்மையான வரலாற்றில் தமிழ்த் தேசிய இனம் தமக்கான தேசத்தில் தம்மைத் தாமே ஆளும் அரசாட்சி கொண்ட தேசமாக பல ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்த வரலாற்றை பாலகுமாரன் தெளிவாக இந்நூலில் வெளிப்படுத்தி உள்ளார்.

பிற்கால வரலாற்றில் சிங்கள இனமும் இத்தேசத்தில் எவ்வாறு வந்து சேர்ந்தார்கள் என்பதை




# ‘பேசுவோம் போரிடுவோம்’ படைத்த க.வே.பாலகுமாரன்:

# ஈழப் புரட்சிக்காக ஆகுதியாகிய தர்க்கீகவாதி!!

வரலாற்று ரீதியாக நிறுவப்பட்ட சான்றுகளை ஆதாரபூர்வமாக க.வே.பாலகுமாரனின் பேசுவோம் போரிடுவோம் நூல் உறுதிப்படுத்தி உள்ளார்.

இந்நூல் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் பல்வேறு காலக்கட்ட நிகழ்வுகளை நமது கண்முன்னே நிறுத்துகிறது. ஈழ விடுதலைப் போராட்டத்தில் புரட்சியாளராகப் பங்கெடுத்துக் கொண்ட க.வே.பாலகுமாரன் வரலாறு மற்றும் அரசியலில் தாம் பெற்ற பட்டறிவுகளை நேர்த்தியான வடிவில் அனைத்துலக அரசியல் நகர்வுகளோடு இணைத்து எழுதுவதில் புலமைப்பெற்றவர்.

அரசியல் தளம் மட்டுமின்றி தமிழரின் அறிவியல், சங்க இலக்கியம், தொல்லியல் என பல்துறை ஆளுமையோடு கட்டுரைகளை எழுதுபவர். ஈழ போராட்டத்தில் உன்னத புரட்சியாளரான

தோழர் க. வே. பாலகுமாரன் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர். இவர் விடுதலைப் புலிகளுக்கு ஒரு அரசியல் மதியுரைஞராக செயற்பட்டார்.

புலிகளுடன் இணையும் முன்னர் இவர் ஈழ புரட்சி அமைப்பின் செயலதிபராக இருந்தார். பின் ஈரோஸ் அமைப்பு விடுதலைப் புலிகளுடன் 1990களின் இறுதியில் சுயமாக இணைந்ததும் அறிந்ததே.

தமிழர் விடுதலைக் களத்தில் போரிடுவதோடு மட்டுமின்றி, தமிழீழ மக்களின் அரசியல் தெளிவிற்காக, பல்வேறு காலக் கட்டங்களில் ஆழ்ந்த அரசியல் நுண்ணறிவை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு கட்டுரைகளை எழுதி அரும்பணியாற்றியவர் க.வே. பாலகுமாரன் அவர்கள்.

காலத்தின் தேவை கருதி தன்னை களத்தில் இணைத்துக் கொண்டு இறுதிவரை தளத்தில் நின்று தோள்நின்ற ஆய்வாளருமான திரு. க. வே பாலகுமாரன் அவர்களது ஆக்கங்களின் தொகுப்பான பேசுவோம் போரிடுவோம் என்ற நூல் வெளியீடு ஐரோப்பாவில் பல நாடுகளில் நிகழ்ந்தது.



க.வே.பாலகுமாரனின் ´பேசுவோம் போரிடுவோம்' நூல் விடுதலைப் போராட்ட வரலாற்றின் பல்வேறு வரலாற்று நிகழ்வுகளை யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்துகிறது.

க.வே.பாலகுமாரன் அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழீழ அரசியல் கட்டுரைகளின் தொகுப்பு ‘பேசுவோம் போரிடுவோம்’ என்ற தலைப்பில் வெளியாகி உள்ள இந்தப் புத்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கட்டுரையும் விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று ஆவண சாட்சியப்பதிவுகளாக விளங்குகின்றன.

**பாலகுமாரன் - புரட்சியின் ஒளிர்முகம்:**

பொதுவுடமைக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட பாலகுமார் புன்முறுவல் என்றும் பூத்த குறுந்தாடிக்கு சொந்தக்காரனாக, நேரியபார்வை கொண்ட பண்பான தலைமைத்துவத்தின் அடையாளமாக என்றும் மிளிர்ந்தவர்.

தமிழ் தேசிய விடுதலைப் பாதையில் நிதர்சனமாய் பாலகுமார் தன்னை இளம் பராயத்திலி



# ‘பேசுவோம் போரிடுவோம்’ படைத்த க.வே.பாலகுமாரன்: ஈழப் புரட்சிக்காக ஆகுதியாகிய தர்க்கீகவாதி!!

ருந்தே இணைத்துக் கொண்டவர். ஈழப் போராட்ட நான்கு தசாப்தங்களாக தனிமனித வரட்டுவாத பிரச்சாரங்களை தவிர்த்து, மக்களுடன் மக்களாய் போராட்ட களத்தில் தன்னை தியாகித்தவர். தமிழ் தேசியத்திற்காய் தோள்நின்று தியாகித்த யதார்த்தவாதியே தோழர் பாலகுமாரன்.

தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் பரந்துபட்ட மக்கள் போராட்டமாகவும் அதேவேளையில் சமூக நீதிக்கான போராட்டமாகவும் அமைய வேண்டும் என்பதில் நம்பிக்கை என்றும் கொண்டவர். அவர் ஈழப்புரட்சிக்காய் தன்வாழ்வையே ஆகுதியாகிய தர்க்கீகவாதி ஆவார்.

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்:

முள்ளிவாய்க்கால் போர் மௌனிப்பின் பின்னர் 2009 இல் தனது மகன் சூரியதீபனுடன் விசாரணைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதாக முதலில் தகவல்கள் வெளியானதன் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட போராளிகளில் பாலகுமாரும் ஒருவர். ஆனாலும் தோழர் பாலகுமார் எங்கு கொண்டு செல்லப்பட்டார், எந்த இரகசிய சித்திரவதை முகாமில் மறைத்து வைக்கப்பட்டார் என்கிற தகவல்கள் எதுவும் பின்னாளில் வெளிவரவில்லை.

2009இல் அன்றைய சிங்கள அரசின் புனர்வாழ்வு அமைச்சரோ, பாலகுமார் இறுதிப்போரில் கொல்லப்பட்டு விட்டார் என்றும், அவர் அரச படைகளிடம் சரணடையவில்லை என்றும் அப்பட்டமான பொய்யை சொன்னார். முள்ளிவாய்க்காலில் உச்சகட்ட இன அழிப்புப்போர் நடந்து முடிந்து



பல ஆண்டுகள் ஆனாலும் இன்னும் நீதியின் கண்கள் திறக்குமா என்று ஏக்கத்தோடு காத்திருக்கும் எண்ணற்ற ஈழ மக்களில் அவரும் ஒருவர். உலகத்தின் மனசாட்சியை உலுப்பி, மௌனித்த முள்ளிவாய்க்கால் போரின் இறுதியில், தமிழ் மக்களில் உள்ள ஏக்கமெல்லாம் மண்ணை மீட்க தம்மைத் தொலைத்துக் கொண்ட பாலகுமாரும் சரணடைந்த மற்றைய போராளிகளும் எப்போது சுதந்திரக் காற்றை சுவாசிப்பார்கள் என்பதுதான்.

உலகப் புரட்சியாளர் வரிசையில் தோழர் பாலகுமாரனும் தனித்துவமாக என்றும் பிரகாசிக்கின்றார். மௌனிக்கப்பட்ட போராட்டத்தின் இறுதிக் கணங்களில் தோழர் பாலகுமார் மாயமானது உலகின் மனச்சாட்சியையே உலுப்பியுள்ளது.

அவருடன் தேச விடியலுக்காய் பயணித்த தோழர்களும், மக்களும் தோழர் வே.பாலகுமாரை ஒரு போதும் மறவர். இன்றல்ல, என்றாவது ஓர் நாளினில் வரலாறு அவரை விடுதலை செய்யும் என்ற நம்பிக்கைகளுடன் ஈழவர் காத்திருக்கின்றனர்.


உதயம் செய்திகள்
பத்திரிகை,
இணையத்தின்
அறிவித்தல்
ஆக்கப்பூர்வமான உங்கள் எழுத்தாற்றலை
வெளிக் கொணர்வதற்கு அறிய வாய்ப்பு
உங்கள் ஊரில் உள்ள பிரச்சினைகள்,
கட்டுரைகள், சிறுகதைகள்,
கல்வி, கலை, கலாசார, சமூக, பொருளாதார
ஆக்கங்களையும் உங்கள் படைப்புக்களையும்
எமக்கு அனுப்பி வைக்கவும்
info@uthayamnews.com
உதயம் செய்திகள் குழுமம்


ria
Money
Transfer
உலகின் எப்பாகத்திற்கும்
பணத்தை அனுப்ப
உடன் நாடுங்கள்
Send and receive money worldwide

அனுசரணையுடன்

# அகவை 3 இல் உதயம் செய்திகள்

3rd ANNIVERSARY

uthayam news உதயம் செய்திகள்

தமிழர்களின் புது யுகம்

பேராதரவை தொடர்ந்தும்
வழங்கி வரும் வாசகர்கள்,
எழுத்தாளர்கள்,
நலன் விரும்பிகள்
உங்களோடு கைகோர்த்துச்
செல்லும் பயணம்
இதே மகிழ்ச்சியுடன் நீளும்....

**அனைவருக்கும்
என்றென்றும் நன்றிகள்....**